பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 27 சனிக்கிழமை 11.07.2020 கதிர் 244



### இனிது ரகசியம் அல்ல!

சர்ச்சையின் மறுபெயர்தான் சுமந்திரனோ தெரியவில்லை. எந்த நேரமும் ஏதோ ஒரு சர்ச்சையில் சிக்கும் மனிதராக அவர் இருக்கின்றார். அதுவும் பொதுத்தேர்தல் சூடு பிடித்துள்ள நிலையில் வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் தென்னிலங்கையிலும் பக்கம்02 »

# அமைச்சுப் பதவியைப் பெறுவதானாலும் பேரம் பேசுவதற்குப் பலம் வேண்டும்!



## செம்பியன்பற்றுக் கூட்டத்தில் சுமந்திரன் பகிரங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

அபிவிருத்திக்காக நாங்கள் செயற்படவேண்டுமென்பதற்கு முற்றுமுழுதாக நான் இணங்குகிறேன். அரசியல் தீர்வொன்று எப்பொழுது வருமெனச் சொல்ல முடியாது. ஜனநாயகச் சூழலில் காத்திருந்து பேச்சு மூலம்தான் பெற முடியும். போர்ச்சூழல் என்றால் அடித்துப் பறிக்கலாம். இது அப்படியல்ல. அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமெனச் சொல்ல முடியாது. அந்த இடைப்பட்ட காலத்தில் நாங்கள் எமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வது அத்தியாவசிய தேவை. புதிய ஆட்சியில் அமைச்சரவையில் சேர்வதாக இருந்தாலும் எந்த அமைச்சுக்கள், எத்தனை அமைச்சுக்கள், என்னவிதமான அதிகாரங்கள் என்பவற்றைப் பேரம் பேச எமக்கு பலம் இருக்கவேண்டும்.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன். பக்கம் 02 »

## ஒரே நாளில் 297 பேருக்கு கொரோனா!

### அதிகாரிகள் அதிர்ச்சி

கொழும்பு, ஜூலை11

நேற்று ஒரே நாளில் 297 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையை அடுத்து, இலங்கையில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2,451 ஆக அதிகரித்துள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்த 196 பேருக்கு கொரோனாத் தொற்று பக்கம் 02 »

# இலங்கை மீண்டும் முடங்கும் அபாயம்!

## கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 11

கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களில் இனி யாருக்காவது தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அவர்களுடன் தொடர்புடைய பிரதேசங்கள் முடக்கப்படும். அது சில வேளைகளில் நாடு முழுவதுக்குமான முடக்கலாக அமையலாம்.

– இவ்வாறு கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார். பக்கம் 02 »

## மற்றுமொரு கைதிக்கும் கொரோனா!

கொழும்பு, ஜூலை 11

வெலிக்கடைச் சிறைச்சாலையின் மற்றுமொரு சிறைக்கைதி கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை வைத்தியசாலையில் பணிபுரிந்த இவர் யாருடன் கடந்த சில நாள்களாகப் பக்கம் 02 »

# கொரோனாப் பேராபத்து சூழ்கிறது என எச்சரிக்கை

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் விடுக்கிறது

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் கொரோனா வைரஸ் தொற்றியவர்கள் அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து கொரோனா வைரஸ் தொற்றினால் இலங்கைக்கு கடும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால், பக்கம் 02 »




# யாழ்.குடாவில் சிவில் நிர்வாகம் ராணுவத்தின் கைக்கு செல்கிறது

### ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் ஓர் இராணுவ அதிகாரியை நியமிக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ். மாவட்டத்தின் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ள பிரதேசங்களில் கிராம அலுவலர் பிரிவு ஒவ்வொன்றுக்கும் இராணுவ அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு – கிழக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகரிக்கப்பட்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டு பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான பேசு பொருளில் அவரும் ஒருவர்.

தமிழ் அரசியலில் அண்மைக் காலத்தில் சுமந்திரன் கிளப்பிய அளவு சர்ச்சைகளை வேறு யாரும் கிளப்பியிருக்க மாட்டார்கள் என்று கூறலாம்.

சில சர்ச்சைகள் அவரைத் தேடி வரும். சிலவற்றைத் தாமே தேடிச் சென்று தம் தலையில் போட்டுக் கொள்வார் அவர்.

அந்த வகை சர்ச்சை ஒன்றுக்கு நேற்று அவர் பிள்ளையார் சுழி போட்டிருக்கின்றார். அதையும் தாண்டி கனகச்சிதமான ஒரு வாதப் பிரதிவாதத்துக்கும் அவர் கதவுகளை ஆழமாகத் திறந்து விட்டிருக்கின்றார்.

நிச்சயமாக அவர் முன்வைத்திருக்கும் கருத்து நிலைப்பாடு மீதான தாக்கமாக அல்லாமல், பெரும்பாலும் அவர் மீதான தாக்குதலாக – காழ்ப்புணர்ச்சி ஏவுகணைகளாக – அவை இருக்கும் என்பது நிச்சயம்.

எனினும் கலங்காமல் – பதறாமல் – கோபப்படாமல் – தமக்கு எதிராகத் தொடுக்கப்படும் வாதங்களுக்கும் வசவுகளுக்கும் அவர் பதிலடி தருவார் என்று எதிர்பார்க்கலாம்.

எனக்கு என்னவோ இப்போது கிளம்பப் போகின்ற சர்ச்சையில் அவர் – சுமந்திரன் – சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்திருக்கின்றார் என்றுதான் தோன்றுகின்றது.

இருக்கும் ராஜபக்ஷக்களின் ஆட்சியை – அரசை – இன்னும் வலுவாக உறுதிப்படுத்தும் தேர்தலாகத்தான் இது அமையப் போகின்றது என்பது கண்கூடு.

இந்த நிலையில், சீர்கெட்டுச் செல்லும் தமிழர் தரப்பின் பொருளாதார நிலையிலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பது குறித்து அவர் சிந்திக்க முயலுகின்றார்.

*"அரசியல் தீர்வு ஒன்று ஏற்படுவதில் உள்ள தாமதம் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பொருளாதார ரீதியாக நாம் வலுப்பட வேண்டும். இல்லாவிட்டால் நலிவடைந்து விடுவோம். அபிவிருத்திக்காக ஏதேனும் செய்தாக வேண்டும்."* – என்று வலியுறுத்தியுள்ள அவர், அதற்காக புதிய அரசில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைச்சுப் பதவிகளை பேரம் பேசிப் பெறுவது குறித்து சிந்திக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

அமைச்சுப் பதவியை ஏற்றல் என்ற செய்தியைக் கசிய விட்டிருக்கின்றார். கேணிப் பைக்குள் இருந்து பூனையை மெல்ல எடுத்து வெளியே விட்டிருக்கின்றார்.

இனி என்ன, கூட்டமைப்புக்குள்ளும் வெளியிலும் ரணகளம்தான்...!

செல்வத்திடம் இருந்தும், சித்தார்த்தனிடமிருந்தும், சரவணபவனிடமிருந்தும் ஏவுகணைகள் பட்டெனப் பறக்கத் தொடங்கும்.

*"அது அவர் பிரேரணை. அவரின் யோசனை. அதற்கும் கூட்டமைப்புக்கும் எந்தத் தொடர்புமில்லை. நாங்கள் அப்படி ஒரு கோரிக்கையைக் கூட மக்கள் முன் வைக்கமாட்டோம்."* – என்று இன்று காலை விடியும் போது செல்வத்திடமிருந்து ஓர் அறிக்கை பறந்து வந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

*"இந்த யோசனையை தமிழரசுச் செயலாளர் துரைராஜசிங்கமும் உட்கட்சிக் கூட்டத்தில் ஒரு தடவை முன்வைத்து எங்களிடம் வாங்கிக் கட்டினார். தமிழருக்கு ஒரு நிரந்தரத் தீர்வு கிட்ட முன்னர் அமைச்சுப் பதவி ஏற்பதில்லை என்பது தமிழரசினதும், கூட்டமைப்பினதும் முடிவு. அதனை சுமந்திரனே பல தடவைகள் முன்னர் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார். ஆகவே அதை தம்பாட்டில் அவர் மாற்ற முடியாது. மாற்ற நாம் அனுமதிக்க மாட்டோம்."* – என்று இன்று தமிழரசு சிரேஷ்ட துணைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் யாழ்.ஊடக அமையத்திலோ அல்லது டான் ரி.வியிலோ போய் அமர்ந்து கொண்டு பேட்டியளித்துக் கொண்டிருப்பார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவோ, இப்படி சுமந்திரன் தம்பாட்டில் தூக்கிப் போட்ட சரவெடி குறித்து என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் முளுசுவார். ஊடகவியலாளர் அழுத்திக் கேட்டால் *"பார்ப்போம் தம்பி. பேசுவோம் தம்பி. கலந்துரையாடுவோம் தம்பி. அமைச்சர் பதவி ஏற்கும் திட்டம் ஏதும் கிடையாது. அதிலும் பார்க்க அரசுக்கு எதிரான எமது போராட்டம் வெடிக்கும் என்று கூறலாம்"* – என ஏதோவொரு சளாப்பல் பதிலைக் கூறுவார்.

*"நாங்கள் சொன்ன வழிக்கு கடைசியாக சுமந்திரனும் வருகின்றார்."* – என்று சந்தோஷத்தில் குறிப்பிடுகின்றமை போல கருத்து வெளியிடுவார் அமைச்சர் டக்ளஸ். ஆனால் மனதுக்குள் தமிழர் தரப்பில் 'ஏக அமைச்சர்' என்ற கனவுக்கும் ஆப்படிக்க வந்து விடுவாங்களோ என்ற ஏக்கம் அவர் மனதில் இருக்கும்.

இனி என்ன, சைக்கிள்காரருக்கும், மீன்காரருக்கும் ஒரே கொண்டாட்டம்.

*"பார்த்தீர்களா, இதனைத்தானே கூட்டமைப்பின் பதவி ஆசை என்று திரும்பத் திரும்பக் கூறினோம். இப்போது மனதில் இருப்பதை மெல்ல அவிழ்த்து விடுகின்றார்கள்."* – என்று விக்கியின் கூட்டணி முதல் சைக்கிள் தரப்பு வரை வெட்டி முழுங்கும்.

ஆக சுமந்திரன் இப்போது கொளுத்திப் போட்டிருக்கும் சரவெடியின் எதிரொலிப்பு பீரங்கிகள், ஆட்லறிகளின் அதிர்வையும் தாண்டும். யாழ்.கோட்டைக்குள் விழுந்து வெடித்த பஸிலன் குண்டுகளின் போரொலி போன்று அவை அதிரலாம்.

ஊடகங்கள் பாடுதான் கொண்டாட்டம். செய்தித் தீனி தாராளமாகக் கிடைக்கும். அதற்கான புதிய போர்முகத்தை – களத்தை – திறந்து வைத்திருக்கின்றார் சுமந்திரன்.

–மின்னல்–

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி செய்யப்பட்டுள்ளதாக நேற்றுக் காலை அறிவிக்கப்பட்டது.

முன்னதாக, நேற்று முன்தினம் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்த 57 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்திருந்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான கைதியுடன் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்தவர்களுக்கே நேற்று முன்தினம் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க குறிப்பிட்டார்.

இதையடுத்து, மேலும் 87 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் நேற்று மாலை இனங்காணப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்த நிலையில் மேலும் 13 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் நேற்றிரவு இனங்காணப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2450 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மாத்திரம் 296 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

## கொரோனாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினமும் 5 ஆயிரம் பி.சி. ஆர் பரிசோதனைகளையாவது நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

மாரவிலவில் அடையாளம் காணப்பட்ட பெண்ணின் மூலம் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலையின் முதல் குழுவினர் அந்தப் பிரதேசத்தில் கண்டறியப்படலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

அத்துடன் கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் தொடர்ந்தும் கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர். எதிர்காலத்தில் மேலும் கொரோனா நோயாளிகள் அங்கு அடையாளம் காணப்படலாம்.

சுகாதார அறிவுறுத்தல்கள் முறையாக பின்பற்றப்படாவிட்டால், கொரோனா வைரஸ் இலங்கை சமூகத்தில் மீண்டும் பரவுவதற்கான அறிகுறிகளைக் காண்பிக்கும் அதேவேளையில் இது ஒரு மோசமான சூழ்நிலையை உருவாக்கும். – என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.குடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டாபய அரசின் மீது சுமத்தப்பட்டு வரும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

கிராம அலுவலர் பிரிவில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் – நுகர்வை ஒழித்தல் போன்ற செயற்பாடுகளை அந்தப் பகுதி இராணுவ அலுவலர் முன்னெடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் இராணுவ அலுவலர் ஒருவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் மேலும் இராணுவச் சிப்பாய்கள் கடமைக்கு அமர்த்தப்படுவர்.

இவ்வாறு நியமிக்கப்பட்ட இராணுவ அலுவலரின் பொறுப்புத் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவூட்டப்பட்டு வருகிறது.

கிராம அலுவலகர் பிரிவில் இடம்பெறும் குற்றச்செயல்கள், போதைப் பொருள் விற்பனை – கடத்தல் மற்றும் நுகர்வு உள்ளிட்டவை தொடர்பில் முதலில் அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான இராணுவ அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும். அவர் ஊடாகவே பொலிஸாருக்கு அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கில் சிவில் நிர்வாகக் கட்டமைப்பில் மீளவும் முற்றுமுழுதான இராணுவத் தலையீடு முன்னெடுக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வரும் நிலையில் இந்த நடவடிக்கை இடம்பெறுகிறது.

## மற்றுமொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பழகினார் என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

ஏற்கனவே கைதி ஒருவர் வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு அதன் பின்னர் பலர் தொற்றுடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இந்தக் கைதி நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## இலங்கை மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையம், வெலிக்கடைச் சிறைச்சாலை ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், அங்கு பணிபுரிபவர்கள் எனப் பலருக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 340 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நாடு முடக்கப்படுமா என்ற அச்சம் பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் சவேந்திர சில்வாவிடம் வினவியபோது,

வெலிசறை கடற்படை முகாமில் ஏற்பட்ட தொற்றுப் போன்று கந்தக்காட்டில் ஏற்பட்ட தொற்றைக் கூற முடியாது. வெலிசறை கடற்படை முகாமில் கடற்படையினர் விடுமுறையில் வீடு சென்று வந்தார்கள். கந்தக்காடு தனிமைப்படுத்தல் மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு ஏற்பட்டால் அங்குள்ளவர்களுக்கு பரவித்தான் அது முடிவுக்கு வரும். ஆனால், கந்தக்காடு தனிமைப்படுத்தல் மையத்தில் பணியாற்றும் ஊழியர்கள் வீடுகளுக்குச் சென்று வந்துள்ளார்கள். அவர்களில் தொற்றுக்குள்ளானவர்கள் கண்டறியப்பட்டால் நிலைமை சிக்கலாகும். அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள், அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் என்று அந்தச் சங்கிலியுடன் தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்பட்டு அந்தப் பிரதேசங்களை முடக்க நேரிடலாம் – என்றார்.

## அமைச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி, செம்பியன்பற்றில் நேற்றுக் காலை நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசுடன் இணைவதா, இல்லையா என்ற தீர்மானம் பின்னர் எடுக்கப்படுவதாக இருந்தாலும், எற்கனவே சில தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துகின்றோம்.

வடக்கு – கிழக்குக்கான மாற்றுப் பொருளாதார நிறுவனமொன்றை ஏற்படுத்தும் முன்னெடுப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உதவியுடன் நமது பாரம்பரிய வாழ்வாதார தொழில்களை நவீனப்படுத்தும் ஒரு முறையையும், புதிதாக தொழில்நுட்பரீதியில் நவீன உலகில் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பது, உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களையும் வகுக்க வேண்டும்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகித தொழிற்சாலை என்பன ஜீ.ஜீ.பொன்னம்பலம் அமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதியில் அமைக்கப்பட்டன. பின்னர் அவர் அமைச்சுப் பதவியை துறந்தபோது, பெரும்பான்மை இனத்தவருடன் இணங்கிச் செயற்படுவதில் நம்பி இறங்கியமை தவறென்பது எனக்குத் தெரிகிறது, அதனால் நான் அமைச்சுப் பதவியிலிருந்து விலகுகிறேன் என அறிவித்தார்.

1952 ஆம் ஆண்டு தேர்தலில் அவரது கட்சி முதன்மைக் கட்சியாக வெற்றிபெற்றது. தமிழ் அரசுக் கட்சிக்கு 2 ஆசனங்கள் தான் கிடைத்தன. ஆனால் அதற்கு பிறகு நடந்த எல்லாத் தேர்தல்களிலும் தமிழ் அரசுக் கட்சி முதன்மையான இடத்தைப் பெற்றது.

ஆட்சியதிகாரம் பிரதேசவாரியாக, சமஷ்டி கட்டமைப்பின் கீழ் பகிரப்பட வேண்டுமென எமது கட்சி சொல்லி வருகிறது. 1956ஆம் ஆண்டியிலிருந்து மக்களின் ஆதரவு அதற்கு இருந்து வருகிறது. இன்று வரை சமஷ்டி என்ற ஆட்சிமுறைக்குக் குறைவாக எமது மக்கள் வாக்களித்ததில்லை. ஒருமுறை தனிநாட்டுக்கும் வாக்களித்தனர்.

எங்கள் மக்களின் எதிர்பார்ப்பு – அரசியல் உரித்துக்களை நாம் பெறவேண்டும். எமது உரித்துக்களைப் பெற்றால் பொருளாதார விடயங்களை நாமே கையாளலாம் என்பதாகவே இருந்தது.

இந்தப் போக்கிலே ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை காண முடிகிறது. நான் போகும் கூட்டங்களில் இளைஞர்கள் நேரடியாக இந்தக் கேள்வியை என்னிடம் கேட்கிறார்கள்.

சென்ற தடவை நாங்கள் இருந்த அரசைக் கவிழ்த்து, 2015இல் புதிய அரசொன்றை அமைத்தபோது நாம் உறுதுணையாக இருந்தோம். இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான சந்தர்ப்பமிருந்ததால் அரசை ஆதரித்தோம். அந்தத் தேர்தலின்போதும் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. அமைச்சரவையில் சேர வேண்டுமெனச் சொல்லப்படவில்லை. சேருவீர்களா எனக் கேட்கப்பட்டது. நாங்கள் சேரவில்லை. ஏனெனில் அரசியல் தீர்வொன்றைப் பேச்சின் மூலம் பெறுவதற்கு, எமது பேரம் பேசும் சக்திக்கு இது தடையாக இருந்துவிடும் என்பதால் நாம் அமைச்சரவையில் சேரவில்லை. அரசில் இணைந்தால் கூட்டுப்பொறுப்பு உள்ளது. அரசின் எல்லா முடிவிற்கும் நாமும் பொறுப்பாளிகள்.

தற்போது ஆட்சி ராஜபக்ஷ குடும்பத்தின் கைக்கு சென்றுள்ளது. அவர்களின் அரசியல் அணுகுமுறைகள் எப்படியானதென எல்லோருக்கும் தெரிகிறது. இந்த அரசில் ஒரு கூட்டுப்பொறுப்புடன் அமைச்சரவையில் இணையலாமா என்கிற கேள்வியுண்டு. பக்கம் 11 »

# 13, 13 பிளஸ் என்பதெல்லாம் முக்கியம் அல்ல: தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வே வேண்டும்

## இப்படிச் சொல்கின்றார் ஞானசார தேரர்



தமிழர்களுக்கு தீர்வு வழங்குவதற்காக எத்தனை வருடங்கள் பேச்சுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன? இதனால் சாதாரண தமிழ் மக்களே பாதிக்கப்படுகின்றனர். அதிகாரத்தைக் கோரும் தமிழ் அரசியல்வாதிகளோ, கொழும்பு வந்துசென்று - சொகுசாக வாழ்கின்றனர். சாதாரண தமிழ் மக்கள் பக்கம் நின்றே இந்தப் பிரச்சினைக்கான தீர்வை காண வேண்டும். இதற்காக நாமும் குரல் எழுப்புவோம்.

- இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று முதல் இன்றுவரை தேர்தல் காலங்களில் 13ஆவது திருத்தச் சட்டம் பற்றிக் கதைக்கப்படுவது வழமையாகிவிட்டது. இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படவேண்டும் என்ற யோசனையை நாம் முன்மொழிகின்றோம்.

இந்த நாட்டை இதுவரையில் சிங்கள தலைவர்களே நிர்வகித்துள்ளனர். ஆனாலும், அவர்களுடன் கூட்டணி வைத்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை காண்பதற்கான வாய்ப்பை தமிழ்த் தலைவர்கள் தவறவிட்டு வந்தனர். எனவே, இந்த நிலைமைக்கு சிங்கள மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்புக்கூறவேண்டும்.

அதேவேளை, 13, 13 பிளஸ் என்பதெல்லாம் முக்கியம் அல்ல. தமிழ் மக்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான பேச்சுக்களை ஆரம்பித்து, இதோ, இந்தத் தீர்வைதான் தம்மால் வழங்கமுடியும் என்பதை பகிரங்கமாக அறிவிக்கவேண்டும். நிர்வாகத்தை வழங்குவதா, அதிகாரங்களைப் பகிர்வதா என்பது பற்றியும் தெளிவுபடுத்தவேண்டும்.

எத்தனை வருடங்கள் இதற்கான பேச்சுகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றன? இதனால் சாதாரண தமிழ் மக்களே பாதிக்கப்படுகின்றனர். அதிகாரத்தைக் கோரும் தமிழ் அரசியல்வாதிகளோ, கொழும்பு வந்து சென்று - சொகுசாக வாழ்கின்றனர். எனவே, சாதாரண மக்கள் பக்கம் நின்றே இந்தப் பிரச்சினைக்கான தீர்வை காணவேண்டும். இதற்காக நாமும் குரல் எழுப்புவோம் - என்றார்.

## வாசுதேவவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி நேற்று யாழில் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை11

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் யாழ் மாவட்டத்துக்கான தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று யாழ்., கிளிநொச்சி அமைப்பாளரும் முதன்மை வேட்பாளருமான டேவிட் நவரட்ணராஜ் தலைமையில் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தத் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு நிகழ்வில் ஜனநாயக இடது சாரி முன்னணியின் சார்பாக யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஜனநாயகஇடதுசாரி முன்னணியின் மாவட்ட முதன்மை வேட்பாளர் டேவிட் நவரட்ணராஜ் உரையாற்றுகையில் -

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அரச வேலைகளுக்கு மட்டுமே இளைஞர், யுவதிகள் முன்னுரிமை கொடுக்கின்ற நிலை காணப்படுகின்றது. அந்த மனோநிலை மாற வேண்டும். அதற்குத் தனியார் தொழில்துறைகள், கைத்தொழில் நிலையங்கள் உருவாக்கப்பட்டு புதிய வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். ஏராளமான இளைஞர்கள் வேலை வாய்ப்பின்மையினால் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.



எனவே வாசுதேவ நாணயக்காரவின் தலைமையில் களமிறங்கியுள்ள எம்மை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறச் செய்ய வேண்டும். அவ்வாறு நாம் இந்தத் தேர்தலில் வெற்றிபெற்றால் கிராம அபிவிருத்தி, கல்வி, கலாசார முன்னேற்றம், தொழில் வாய்ப்புக்கள் ஆகியவற்றைத் துரிதமாக முன்னெடுப்போம்.

குறிப்பாகக் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, புல்மோட்டை இல்மனைற் தொழிற்சாலை ஆகிவற்றை மீளக்கட்டியெழுப்பி இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது எமது முக்கிய பணியாக இருக்கும். எனவே மக்கள் இம்முறை ஜனநாய இடதுசாரி முன்னணியை பலப்படுத்தி எமக்கு ஆதரவினை வழங்கவேண்டும். - என்றார்.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 11

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை -

**யாழ் பிரதேசத்தில் -**

கரணவாய், நாவலர்மடம், தூதாவளை, நெல்லியடி, கரவெட்டி, சக்களாவத்தை, இரும்பு மதவடி, வதிரி, திக்கம், மனோகரா, சித்தி விநாயகர் கோவிலடி பிரதேசம், தேவரையாழி, உடுப்பிட்டி, நெல்லியடி பொலிஸ் நிலையம், நெல்லியடி சந்தை, றூபின்ஸ் வைத்தியசாலை, நெல்லியடி கார்கில்ஸ் பூட் சிற்றி, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், இலங்கை வங்கி நெல்லியடி, பலாலி வீதி திருநெல்வேலி சந்தியிலிருந்து வேம்படி சந்தி வரை, திருநெல்வேலி, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்னசத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி, அத்தியடி, வீரமாகாளி கோவிலடி, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், திருநெல்வேலி புறப்பாட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், Bright Inn, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, IBC தமிழ், BCCAS ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில் -**

நீலாமடுவிலிருந்து சிலாவத்துறையூடாக அரிப்பு வரை, சிலாவத்துறை கடற்படைமுகாம், கொக்குபடையான், கொண்டாச்சி கிராமம், மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம், கரடிக்குழி, பாலக்குழி, முள்ளிக்குளம் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம், ஞுழரவாடியச, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களில் -

**மேலும் மன்னார் பிரதேசத்தில் -**

சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyrah House கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah House கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, News Silk Road, தோட்டவெளி, Timecx ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் காலை 6.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப்பகுதியில் **காலை 6.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப்பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில் இரண்டு மணித்தியாலங்களும்** மின்தடை ஏற்படும் என மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.


## பொது அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேசசபை

1972 ஆம் இலக்க 17.06.2016 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வலிகாமம் தெற்கு பிரதேசசபைக்குச்சொந்தமான, உடுவில்பகுதியில் அமைந்துள்ள களவியாவத்தை வீதியினை 'அதிபர் சிவாஜி வீதி' எனப்பெயர்மாற்றம் செய்யுமாறு அப்பகுதி மக்களால் கோரிக்கையொன்று எமதுசபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

விபரம் பின்வருமாறு

வீதியின் இலக்கம் :- NJVSE 245

வீதியின் ஆரம்பம் :- கைதடி மானிப்பாய் வீதி (சேர் சரவணமுத்து வீதி)

வீதியின் முடிவு :- டச் வீதி (சாமுவேல் மான் வீதி)

வீதியின் நீளம் :- 700 மீற்றர்

கிராம சே. உ. பிரிவு :- உடுவில் மத்தி வடக்கு

கிராம சே. உ. பிரிவு இல :- J/185

எனவே இவ்வீதிபெயர்மாற்றத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் எதிர்வரும் 27.07.2020 ஆம் திகதிக்குள் எழுத்து மூலம் 'தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்' எனும் முகவரிக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
10.07.2020


## முந்தல் ஆஸ்பத்திரி தற்காலிகமாக மூடல்

### கொரோனாப் பீதியால்

முந்தல் வைத்தியசாலையை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த இளைஞன் உயிரிழந்தமையைஅடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாரவில பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்த இளைஞனுக்கு பீ.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அதன் அறிக்கை கிடைக்கும் வரை வைத்தியசாலையை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் -சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வடக்கு மக்களுக்கு எப்போதும் அந்நியமாகும் பொலிஸ் துறை

வரலாற்றில் இருந்து பாடம் படிக்காதவன் தேறப்போவதில்லை.

இது இலங்கைப் பொலிஸாருக்கும் பொருந்தும். வடக்கில் பொலிஸார் நடந்து கொள்ளும் முறைமை அவர்கள் வரலாற்றில் இருந்து பாடம் படிக்கவில்லையோ என்ற எண்ணத்தைத்தான் தந்து நிற்கின்றது.

தற்போது வடக்கில் பொலிஸார் விடயங்களை அணுகுகின்ற முறைமையை நோக்கினால், வடக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதை விட, தமது அரசியல் எஜமானர்களின் விருப்பத்தை நிறைவு செய்வதில் மட்டும்தான் அவர்கள் அதிக ஆர்வமும் ஈடுபாடும் காட்டி நிற்கின்றனர் என்பது புலப்படும்.

இந்த அணுகுமுறை வடக்கில் பொலிஸ் என்பது ஆக்கிரமிப்புக் கட்டமைப்பு – அரசியல் தலைமைகளின் ஏவல் படை – என்ற எண்ணத்தைத்தான் மக்கள் மத்தியில் ஏற்படுத்தும்.

பொலிஸ் துறை என்பது மக்களுக்கான அமைப்பு, மக்களின் அமைப்பு என்ற எண்ணத்தை – கருத்தை – மனவுணர்வை – அது மக்கள் மத்தியில் ஏற்படுத்தாது.

தமிழர்களினுடைய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் அஹிம்சை வழியில் இருந்து ஆயுத வழிக்குத் திரும்பிய எழுபதுகளின் பிற்பகுதியை எடுத்து நோக்கினால், தமிழ் இளைஞர்களை அந்த வழிக்கு நெட்டித் தள்ளியதில் காக்கிச் சீருடைக்கு இருந்த அளவுக்கு அதிகமான பங்களிப்பு அப்பட்டமாக வெளிப்படும். அந்தக் ‘காக்கிச் சீருடைக்குள்’ வெறும் இராணுவத்தினர் மட்டுமல்லாமல், பொலிஸாரும் முக்கியமாக அடங்குவர்.

அவர்களின் அட்டகாச – அராஜக – செயற்பாடுகளும் இளைஞர்களை அஹிம்சை வழி மீது நம்பிக்கையிழக்க வைத்து ஆயுத வழியின்பால் செல்லத் தூண்டின என்பது வரலாற்றுப் பாடம்.

அந்த வரலாற்றுப் பாடத்தை பொலிஸ் துறை மறந்து விட்டு மீண்டும் பழைய சட்டம்பிப் பாணியில் தடியைத் தூக்கியிருக்கின்றமை நமது துரதிஷ்டம்.

ஒரு பிரதேசத்தில் பொலிஸ் துறை மேம்பட்டுச் செயலாற்ற வேண்டுமானால் அந்தப் பிரதேச மக்களுக்கு பொலிஸ் மீது நம்பிக்கை பிறக்க வேண்டும். இது எங்கள் பொலிஸ், எங்களைப் பாதுகாக்கின்ற – எமது உரிமைகளைப் பேணுகின்ற – எமது காவல்துறை என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும்.

ஆனால் வடக்கில் – யாழ்ப்பாணத்தில் – பொலிஸ்துறை அப்படி நடக்கவேயில்லை. ஆக்கிரமிப்புப் படையின் ஓர் அங்கம் போலவே இன்னும் செயற்படுகின்றது. வெளிப்படையாகவே அப்படித்தான் செயற்படுகின்றது.

இதைத்தான், ஆயுத வழிக்குச் செல்வதற்குத் தமிழ் இளைஞர்களை நெட்டித் தள்ளுகின்றது இலங்கைப் பொலிஸ் என்று கண்டித்திருக்கின்றார் முன்னாள் எம்.பியும், முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான சிவாஜிலிங்கம்.

சரியாக இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த அப்பாவிப் பொதுமக்கள் மீது இலங்கை விமானப் படையின் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியமையில் நூற்றியைம்பதுக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானார்கள். முந்நூறுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர். அவர்களில் பலர் நிரந்தர அங்கவீனமாகினர்.

வடக்கு மக்களின் வரலாற்றில் அவர்களைப் பெரும் சூனியத்துக்குள் தள்ளிய மிக மோசமான கொடூரங்களுள் இதுவும் ஒன்று.

இந்த நினைவழியாக் கொடூர விடயத்தில் இப்போது மிகச் சின்னத்தனமாக – அற்பத்தனமாக – பிற்போக்குத்தனமான கும்பல் போன்று – செயற்பட்டிருக்கின்றது இலங்கை பொலிஸ்.

குடாநாட்டை இரும்புத் திரையிட்டு மூடி மறைத்தபடி, வெளிநாட்டுத் தொடர்பாடல்கள் ஏதும் இல்லாத நிலையில், அப்பாவிகளைக் கொன்றொழித்த இந்தக் கொடூரத்தை அப்படி ஒன்று இங்கு நடக்கவேயில்லை என்று அப்போது சாதித்துச் சமாளித்தது கொழும்பு அரசு.

அச்சமயத்தில் கொழும்பு அரசுக்குப் பொறுப்பாக இருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே ‘இப்படி ஒரு சம்பவம் அப்போது நடந்தது. பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்காக நான் விமானப் படைகளைக் கண்டித்தேன்’ – எனறு பகிரங்க ஒப்புதல் வாக்கு மூலம் அறிவித்திருக்கின்றார்.

அது மாத்திரமல்ல, அப்படிக் கொல்லப்பட்டவர்களின் உறவுகள், அவர்களை நினைவு கூரவும் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், அது அவர்களின் அடிப்படை உரிமை என்றும் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

ஆனால், குடாநாட்டு மக்களின் காவலனாக இருக்க வேண்டிய யாழ்.பொலிஸ் துறை எப்படி நடந்து கொண்டது?

மக்களின் அந்த உண்மையான உரித்தை – அடிப்படை உரிமையை – மறுப்பதற்காக நீதிமன்றுக்குச் சென்றது இலங்கைப் பொலிஸ்.

அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டமையை ஒட்டிய கால் நூற்றாண்டு நிகழ்வை – அமைதியான பிதுர் வணக்கத்தை – சோகத்துடன் கூடிய நினைவு கூரலை – புலிகளின் மீளுருவாக்க நிகழ்வு போன்று காட்டி, அதன் மூலம் அந்நிகழ்வைத் தடுக்கும் மிக அபத்தமான – கொச்சைப்படுத்துகின்ற – ஆகவும் கீழ்த்தரமான – முயற்சியை இலங்கைப் பொலிஸ் எடுத்திருக்கின்றது.

தீவிரவாதமே சம்பந்தப்படாத மக்களின் நினைவு கூரல் நிகழ்வைப் ‘பயங்கரவாதம்’ போன்று சித்திரிக்கும் வடக்குப் பொலிஸை மக்கள் எவ்வாறு தங்கள் காவலன் என்று கருதுவார்கள்?

பொலிஸ் – பொது மக்கள் நட்புறவுக் குழுக்கள் என்று பிரதேச ரீதியாகச் செயற்படும் – பொலிஸாருக்கு காவடி தூக்கும் – நம் உள்ளூர்ப் பிரமுகர்களாவது இவ் விடயத்தைப் பொலிஸாருக்கு வெளிப்படையாகக் கூற மாட்டார்களா?

## வடக்கு , கிழக்கு தமிழ்ப் பிள்ளைகளின்

# கழுத்தில் தொங்கிய சயனைட்களை அகற்ற முடிந்தமை எனது பாக்கியம்

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கடந்த போர்க் காலத்தில் துப்பாக்கியை கையில் எடுத்த பயங்கரவாதிகளுடன் போரிட்டோமே தவிர தமிழ் மக்களுடன் அல்ல. வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பிள்ளைகளின் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருந்த சயனைட் குப்பிகளை அகற்ற முடிந்தமையை பாக்கியமாகக் கருதுகின்றேன். பயங்கரவாதத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தமையாலேயே இன்று நாட்டவர்கள் அனைவரும் சுதந்திரமாக தங்கள் பயணங்களை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கேகாலை, கலிகமுவயில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வந்தவுடன் உடனடியாக மீள் ஏற்றுமதியை நிறுத்தியதன் மூலம் விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்வதற்கான முதல் அடியை எடுத்து வைத்துள்ளது.

2005ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான எங்கள் ஆட்சியின் போது நாட்டுக்கு உணவு வழங்கிய விவசாய மக்களுக்கும், விவசாயத்துக்கும் உரிய அங்கீகாரம் கிடைத்த போதிலும், ஐக்கிய தேசியக் கட்சி அரசு அதிகாரத்துக்கு வந்த அனைத்து சந்தர்ப்பத்திலும் விவசாயத்தைக் கவனிக்காமல் விட்டது.

தேசிய டயர் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பில் இதுவரையிலும் ஜனாதிபதியின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தேசிய இறப்பர் விவசாயிகளின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

# துணைவேந்தர் தெரிவு புள்ளியிடலில் உயர் பட்டப் படிப்பு மாணவர் ஒருவரும்?

## யாழ். பல்கலையில் புதிய சர்ச்சை!

யாழ்ப்பாணம்,ஜூலை11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவில் மீண்டும் சர்ச்சையொன்று கிளப்பப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்ட புதிய நடைமுறைகளின் பிரகாரம் எதிர் வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ள துணை வேந்தர் தெரிவுக்கான மதிப்பீடு செய்யும் விசேட கூட்டத்தில் மதிப்பீடு செய்யும் பேரவை உறுப்பினர்கள் தொடர்பிலேயே இந்தச் சர்ச்சை எழுந்திருக்கிறது.

பல்கலைக்கழகத்தின் நடப்பாண்டில் கலாநிதி கற்கை நெறிக்கு மாணவராகப் பதிவு செய்துள்ள ஒருவர், பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுக்கான மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபட்டுப் புள்ளியிடலை மேற்கொள்ள முடியுமா என்று கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்ட புதிய நடைமுறைகளின் பிரகாரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காகப் பதிவாளரால் கடந்த மே மாதம் 15 ஆம் திகதி விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அதற்கான முடிவுத் திகதியாக அறிவிக்கப்பட்ட ஜூன் மாதம் 9 ஆம் திகதியன்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காக 6 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அந்த 6 பேரினது தகுதி, தராதரங்களின் அடிப்படையில் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து, திறமை அடிப்படையில் முதல் 5 பேரின் புள்ளி விவரங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதியன்று நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அன்றைய தினமே பேரவை உறுப்பினர்களும் ஐந்து பேர் தொடர்பில் தனித்தனியாக மதிப்பீடு செய்து தமது முடிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பேரவையில் மூதவை சார்பில் அங்கம் வகிக்கும் ஒருவர், பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெறுவதற்காக - உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் மாணவராகப் பதிவுசெய்து, கற்றுக்கொண்டிருக்கிறார். அவரும் மதிப்பீடு செய்யும் ஓர் உறுப்பினராகின்றார். அவர் உயர் பட்டப் படிப்புக்கு மாணவராகப் பதிவு செய்த அதே பீடத்தின் பீடாதிபதியும் துணைவேந்தர் பதவிக்கான ஒரு விண்ணப்பதாரியாக இருப்பதனால் இங்கு முரணிலை ஈடுபாட்டைத் (conflict of interest) தோற்றுவிக்கலாம் என்று ஏனைய விண்ணப்பதாரிகளும், பேரவை உறுப்பினர்களும் விசனமடைந்திருக்கின்றனர்.

இதுதொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் எழுத்து மூல தெளிவுபடுத்தல் பெறப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்கள் இன்றைய பேரவைக் கூட்டத்தில் கேள்வி எழுப்பவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# கந்தக்காடு சென்று வந்தவர்களின் பஸ்ஸை அடையாளம் காண முயற்சி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து பொலன்னறுவைக் கந்தகாட்டில் போதைவஸ்து புனர்வாழ்வு மையத்திற்கு உறவுகளைச் சந்திக்க சென்று வந்தவர்கள் பயணித்த பஸ்ஸை அடையாளம் காணும் தீவிர முயற்சியில் சுகாதார வைத்திய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்த 226 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில் அந்த முகாமில் உள்ள உறவுகளைப் பார்வையிட கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று திரும்பியவர்கள் என்ற அடிப்படையில் மூன்று குடும்பங்கள் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தனிமைப்படுத்தப் பட்டவர்களில் இரு குடும்பங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபை பகுதியிலும் ஒரு குடும்பம் சண்டிலிப்பாய் பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறித்த மூன்று குடும்பங்களும் உறவுகளைப் பார்வையிட்ட பின்பு மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் பயணித்த பஸ்ஸையும் அதில் பயணித்தவர்களையும் அடையாளம் காணும் முயற்சி நேற்றுமுதல் முடுக்கி விடப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்)

# இந்திய ஆதரவுடன்தான் ஈழத் தமிழருக்குத் தீர்வு

## அடித்துச் சொல்கிறார் சி.வி.கே.சிவஞானம்



யாழ்ப்பாணம், ஜூலை 10

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இந்தியாவின் ஆதரவுடன்தான் பெற்றுக் கொள்ளலாம் என வடக்கு மாகாண அவைத் தலைவரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவரது செவ்வியின் விவரம் வருமாறு:-

கேள்வி - தமிழ் மக்கள் மத்தியில் எப்பொழுது பார்த்தாலும் தமிழ்த் தலைவர்கள் அரசியல் தீர்வு இப்பொழுது வருகின்றது. அப்பொழுது வருகிறது என்று சொல்லிக் கொண்டு இருப்பது ஒரு வழமையான விடயமாகிப் போய்விட்டது. இந்த அரசியல் தீர்வு சார்ந்த விடயத்தில் சிங்களம் எப்பொழுதாவது அரசியல் தீர்வை முன் வைக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

பதில் - அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதாக பாசாங்கு செய்வார்கள் என்பதுதான் கடந்த 5 வருட கால அனுபவம். அதற்கு முன்னரும் சொன்னார்கள் தான். கடைசியாகக் கொஞ்சம் படிமுறைக்கு மேலாக வந்தது. அதை நாங்கள் ஒத்துக் கொள்ளவேண்டும். மொழி சம்பந்தமாக இன்றைக்கு சிங்களம் மட்டும் சட்டமில்லை. தமிழும் சிங்களமும் தேசிய மொழிகள் என்று வந்துவிட்டதுதானே. உத்தியோகபூர்வ மொழி என்று வந்துவிட்டதுதானே. மாற்றம் நடைபெற்றதுதானே. அதேபோல் 78 ஆம் ஆண்டு அரசமைப்பிலே பௌத்தத்திற்கு முன்னுரிமை என்ற வசனம் இருக்கிறது. இன்றும் அதுதான் இருக்கிறது. ஆனால் முக்கியமான விடயம் நடந்தது. இந்த முன்மொழிவிலே என்ன நடந்தது என்றால் ஏனைய மதங்களுடைய உரிமை இப்பொழுது இந்த மதங்கள் என்ற ஏற்பாட்டுக்குள்ளே உள்ளடக்கப் பட்டுள்ளது. இப்பொழுது அது அடிப்படை உரிமைகளுக்குள் கொண்டு போய் செருகப்பட்டுள்ளது.

ஆனால் எங்களில் சிலர் இது ஒரு மதச்சார்பற்ற நாடு என்கின்றார்கள். இது எல்லாம் அர்த்தமில்லாமல் யதார்த்தமில்லாமல் நாங்கள் கதைப்பது. இந்தியா மதச் சார்பு இல்லாத நாடாக இருக்கிறது. ஆனால் பாரதீய ஜனாதாக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் அங்கு அப்படி நடக்கிறதா? இல்லை. நடைமுறை அப்படி. 74 வீத மான பௌத்தர்கள் மதச்சார்பற்ற நாடாக இந்த நாட்டை மாற்ற முடியாது என்று மறுக்கின்றார்கள். எங்களுடைய மதங்களுக்கான ஏற்பாட்டை மதங்களுக்குள் கொண்டு வந்தது முன்னேற்றம். ஆனால் அது திருப்தி இல்லை. இது மதச்சார்பற்றதல்ல. இதைக் கேட்கிறவர்களுக்கு நான் பொதுவாகச் சொல்கிறேன். தனிய ஒரு மதத்திற்குச் சொல்லவில்லை. இப்போது இருக்கின்ற நிலையில் நாங்கள் மிகக் கவனமாக இதனைக் கையாளவேண்டும். நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பது உண்மைதான். இதை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இதுதான் யதார்த்தம்.

தந்தை செல்வாவையே ஏமாற்றியவர்கள் என்பது என்னுடைய கருத்து. இது புதியவர்களுக்குத் தெரியாது. 1965 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் டட்லி சேனநாயக்காவுடன் உடன்படிக்கை செய்து திருச்செல்வத்தை அமைச்சராக்கினார்கள். பின்னர் 1968 இல் பதவி விலகி யாழ்ப்பாணம் வந்தனர். என்னுடைய ஊரான கல்வியங்காட்டில் முதலாவது பொதுக் கூட்டம் நடந்தது. அப்பொழுது மக்கள் மத்தியில் சரியான கொந்தளிப்பு நிலை காணப்பட்டது. தந்தை செல்வநாயகம் பேச எழும்பினார். அவர் பெரிதாக ஒன்றும் பேசவில்லை. நாங்கள் அவர்களை நம்பினோம். ஏமாற்றிவிட்டார்கள். ஏமாந்து போனோம் இவ்வளவுதான் சொன்னார். அந்தச் சபையில் ஒரு சலனம், சத்தம் இல்லை. அமைதியாக இருந்தது. தந்தை அவ்வளவுதான் சொன்னார். ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்றால் அவர் உண்மையைச் சொன்னார். நம்பியே எங்களை ஏமாற்றி விட்டார்கள் ஏமாந்து போனோம். இன்றைக்கும் இது இருக்கிறது. இது ஒரு வரலாறாக நடைபெறுகின்றது. இதை நாங்கள் எப்படி ஒளிப்பது. அது உண்மை. சர்வதேசத்தையும் குறிப்பாக இந்தியாவையும் இணைத்து, இந்தியா இதில் கொண்டிருக்கின்ற தெளிவான வகிபாகத்தைப் பலப்படுத்தி செயற்படுத்தவேண்டிய தேவை இருக்கிறது. இந்தியா - இலங்கை ஒப்பந்தம் அதை உறுதிப்படுத்தியது. இந்திய அரசு ஒரு அன்டரைட்டர். அந்த ஒப்பந்தத்திலே இருக்கிறது. இந்தியாவுக்கு பொறுப்பு இருக்கிறது.


அதை நாங்கள் வலியுறுத்தவேண்டிய தேவை இருக்கிறது. அதன் ஊடாக சுமுகமான சூழலை இந்தியா மூலம் ஏற்படுத்தவேண்டும். நாங்கள் பலமாக நின்றுகொண்டு இந்தியாவையும் கேட்கலாம். நீங்கள் பிரிந்து பிரிந்து ஒற்றை, இரட்டை பிடித்துக் கொண்டு நின்றால் இந்தியாவும் அதில் வர வாய்ப்பு இல்லை. இதில் இந்தியாவைக் குறை சொல்லக்கூடாது. நாங்கள் பலமாக நின்றுகொண்டு மக்கள் எங்களை தெரிவு செய்வார்களோயானால் இந்தியாவைக் கூட வலுவாக நாங்கள் கேட்கலாம். நாங்கள் பலமாக நிற்கிறோம், நீங்கள் எங்கள் பிரச்சினையில் தலையிடுங்கள் என்று கேட்கலாம். சர்வதேசத்தைக் கேட்கலாம். அதன் மூலம் நாங்கள் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் எந்த விடயமாக இருந்தாலும் இறுதி முடிவு இந்நாட்டிலே இருக்கின்ற, பதவியில் இருக்கின்ற அரசுதான் செய்ய வேண்டும். அதை எதிர்க்கட்சிகளும் ஆதரிக்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். அது சர்வதேசத்தாலேதான் முடியும்.

# இராணுவப் பிரசன்னம் வடக்கில் அதிகரிப்பு!

## ரட்ணஜீவன் ஹூல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 10

ஒகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, வடக்கில் இராணுவம் உள்ளமை பற்றி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் கவலை வெளியிட்டுள்ளார்.



இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள ஒரு மின்னஞ்சல் அறிக்கையில், வடக்கில்படையினரை நிலைகொள்ளச் செய்யும் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலனாய்வு அதிகாரிகள் சில வேட்பாளர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்கள் எங்கு செல்கிறார்கள், எங்கு கூட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன என்பது குறித்து தகவல்களைத் திரட்டியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்காந்தராஜா முறைப்பாடு வழங்கியுள்ளார் என அவர் கூறினார்.

இராணுவம் வடக்கில் சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளதாகவும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்பட்டு அவர்களின் வாகனங்கள் பரிசோதிக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜூலை ஐந்தாம் திகதி எங்களின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தேர்தல் அதிகாரி இரண்டு தடவை தடுத்து நிறுத்தப்பட்டுச் சோதனை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார் என ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பிலிருந்து கிளிநொச்சி செல்லும் வீதியில் அது இடம்பெற்றது என்பதைத் தான் உறுதி செய்கிறார் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இவ்வாறே அச்சத்தில் சிக்குண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ள அவர், இராணுவத்தின் மோசடியை அந்த அதிகாரிகள் எவ்வாறு தெரிவிப்பார்கள் என்றும் கேள்விஎழுப்பினார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சாள்ஸ் நிர்மலநாதனின் வாகனம் முல்லைத்தீவில் நிறுத்தப்பட்டுச் சோதனை செய்யப்பட்டபோது வாகனத்தில் அடையாள அட்டை அளவைக்கொண்ட வேட்பாளரின் படம் பொறிக்கப்பட்ட காட் காணப்பட்டுள்ளது. அவை முறையானவை எனக் குறிப்பிட்டுள்ள ஹூல், சுவரொட்டிகள் மட்டுமே தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் இராணுவம் வாகனத்தை நிறுத்தி அட்டைகளைப் பறிமுதல் செய்தது என குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 17 ஆம் திகதி அன்று ஜனாதிபதியை சந்தித்தபோது அவர் அளித்த இரண்டு முக்கிய வாக்குறுதிகளில் தேர்தலின்போது இராணுவம் நிறுத்தப்படமாட்டாது, பொலிஸார் மட்டுமே பயன்படுத்தப்படுவர், சுகாதார வழிகாட்டுதல்கள் வர்த்தமானி செய்யப்படும் என்பதையும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூல் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கந்தக்காட்டில் மேலும் 196 பேருக்குத் தொற்று!

கொழும்பு, ஜூலை 10

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்த மேலும் 196 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இதன்மூலம் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இதுவரை 252 பேருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான கைதியுடன் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்தவர்களுக்கே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வெலிக்கடை கைதியுடன் மூன்று மாதங்கள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியிருந்தவர்கள் மற்றும் அங்கு பணியாற்றிய ஊழியர்கள் அடங்கலாக 338 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் கொரோனா அபாயம்

## மூன்று குடும்பங்களை தனிமைப்படுத்தப் பணிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் , ஜூலை 10

கந்தகாடு போதைவஸ்து புனர்வாழ்வு மையத்தில் உள்ள உறவுகளைப் பார்வையிடச் சென்று திரும்பியவர்களை உடனடியாக 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்த 226 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில் அந்த முகாமில் உள்ள உறவுகளைப் பார்வையிட அண்மையில் சென்று வந்தவர்கள் என்ற அடிப்படையில் மூன்று குடும்பங்கள் இங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களில் இரு குடும்பங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைப் பகுதியையும், ஒரு குடும்பம் சண்டிலிபாய் பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரண்டு குடும்பங்களில் ஒன்று கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள மூத்தவிநாயகர் ஆலயக் குறுக்கு வீதியிலும் மற்றையது சுண்டுக்குழியிலும் வசிக்கின்றன. மூன்றாவது குடும்பம் மானிப்பாய் பகுதியில் வசிக்கின்றது.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட மூன்று குடும்பத்தவரினதும் வீடுகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையோடு அந்தக் குடும்பத்தவர்களுக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்

(10 ஆம் பக்கத் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# துலையப்போகிறது நம் இனம்!

- கம்பவாரிதி இலங்கை.ஜெயராஜ் -

உலகம் இயற்றிய கடவுளை, 'பரந்து கெடுக!' எனத் திட்டினான் வள்ளுவன்.
அதுபோலத்தான் நம் ஈழத் தமிழனத்தையும் திட்டத் தோன்றுகிறது.
மண்ணுக்காக தம்மைத் தியாகம் செய்த எத்தனையோ இளைஞர்களின்,
இரத்தத்தினதும், தசையினதும் ஈரலிப்பு இன்னும் காயாத நம் மண்ணின் மேல் நின்றுகொண்டு,
கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் பதவி ஆசையும், சுயநலமும் பிடித்து,
தமது தேவை நிறைவேற்றுவதற்காய் உரிமை, உணர்ச்சி எனப் பொய்மைபேசி,
மக்களைப் பாதாளம் நோக்கி இழுத்துச் செல்லும் தலைவர்கள் ஒருபுறம்.

***

தமக்கு நடக்கும் துரோகத்தின் வீச்சைக் கூடத் தெரிந்துகொள்ளாமல்,
பலிபீடத்தில் தாமாய்க் கழுத்தைக் கொண்டுபோய் வைக்கும் ஆடுகள் போல,
அந்த சுயநலத் தலைவர்களின் 'உசுப்பேத்தலுக்கு' ஆட்பட்டு,
'உருவாடி'க் கொண்டிருக்கும் மக்கள் இன்னொரு புறமுமாக,
தேர்தலையொட்டி அசிங்கங்கள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

***

தமது வீழ்ச்சியைத் தாமே கொண்டாடிக் கொண்டிருக்கும் நம்மக்களையும்,
தம் சொந்த மக்களையே ஏமாற்றிப் பிழைக்க நினைக்கும் தலைவர்களையும் காண,
சகிக்கமுடியாத எரிச்சல் உண்டாகிறது.
இப்படியுமா ஒரு இனம் முட்டாள் தனத்தோடு இயங்கும்.
**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

'என்ன? ஒன்றுமே சொல்லாமல் இந்தக் கொந்தளிப்பு' என்கிறீர்களா?
கொந்தளிக்காமல் என்ன செய்வதாம்?
குற்றவாளிகளிடமே நீதி கோரவேண்டிய அவலநிலையில் நிற்கிறோம் நாம்.
மீண்டும் நீட்டாமல் என் கொந்தளிப்புக்கான காரணத்தை இனிச் சொல்லுகிறேன்.
தேர்தல் நிச்சயிக்கப்பட்டதிலிருந்து நம் சமூகம் குழம்பிக் கிடக்கிறது.
நம் தலைவர்களெல்லாம் இப்போது ஒரே 'பிசி',
எதில் 'பிசி' என்கிறீர்களா? - வேறெதில் குழிபறிப்பதில்த்தான்.
ஒருவருக்கொருவர் குழிபறித்து அவர்கள் செய்யும் கூத்துக்களுக்கு ஓர் அளவேயில்லை.
அக்குழிகளில் புதைக்கப்படப்போவது நம் இனநலம் தான் என்பது தெரியாமல்,
ஆட்டுமந்தை மக்களும் அக்குழிவெட்டும் போட்டியில் அணிசார்ந்து,
கைதட்டி தலைவர்களை ஊக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

***

இந்த இனத்தை அறிவாளிகளின் இனம் என்று சொன்னவனைக் கழுவேற்ற வேண்டும்.
உண்மையை இனங்காணத் தெரியாமல் பொய்மையின் 'வால் முறுக்கல்களுக்கு' எடுபட்டு,
துள்ளி ஓடத் தயாராகும் நம் இனம் எப்படி உருப்படும்?
**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

தேர்தல் மேகம் சூழத் தொடங்கிய நாளிலிருந்து,
சுமந்திரனைக் குறிவைத்து மாற்றுக்கட்சியினரும், ஊடகங்கள் சிலவும்,
இணையவெளியில் சிலருமாக நடத்திவரும் தாக்குதல்கள் ஆச்சரியம் தருகின்றன.
போதாக்குறைக்கு கூட்டமைப்புக்குள்ளேயே இருக்கும் சில புல்லுருவிகளும்,
இவ்விடயத்தில் தம் பங்கிற்கு ஏதேதோ கைங்கரியங்களைச் செய்து வருகின்றனர்.
ஏதோ ஓர் இனத்துரோகியை அடையாளம் கண்டுவிட்டாற்போல,
சுமந்திரனைக் 'குதறித்' தள்ளும் இவர்களுடைய கூத்து,
இனப்பற்றுள்ள நடுநிலையாளர்கள் மனதில் பெரும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

***

வெறும் வாயை மென்றுகொண்டிருந்த அவர்களுக்கு,
அண்மையில் வெளிவந்த சுமந்திரனின் பேட்டி அவலாயிற்று.
ஏதோ சுமந்திரன் இனத்துரோகம் செய்துவிட்டது போலவும்,
தாமெல்லாம் இனத்திற்காக சிலுவையில் ஏறத் தயாராக இருப்பது போலவும்,
நம் போலித் தலைவர்கள் விடும் அறிக்கைகள் எரிச்சல் ஊட்டுகின்றன.
அந்தப் பேட்டியில் சுமந்திரன் சற்றுத் தடுமாறியது உண்மையேயாம்!
ஆனாலும் தன் கருத்துக்கான விளக்கங்களை மக்கள் மன்றில்,
அவர் ஏலவே தெளிவுறச் சொல்லிவிட்ட பின்பும்.
கிடைத்த பந்தை விடாமல் தம் இஷ்டத்திற்கு எறிந்து கொண்டேயிருப்போம் எனும்,
மாற்றுத் தலைவர்களின் செயலை என்சொல்ல? அவர்களைத்தான் விட்டுத் தள்ளுங்கள்!
எறியப்படுவது 'நோ போல்' எனத் தெரிந்தும் அதற்கும் கைதட்டிக் கொண்டிருக்கும்,
மந்தை மடையர்களை என்சொல்ல?
**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

'பிரபாகரன்', 'போராளிகள்' என்ற வார்த்தைகளை வைத்து,
நம்தலைவர் சிலர் செய்யும் கீழ்மையான பொய்ப் பிரச்சாரங்களின்,
உண்மை நிலை புரியாமலே மக்களில் ஒரு பகுதியினர் உணர்ச்சிவயப்படுகிறார்கள்.
தமதுகுடும்பம், வாழ்வு, இளமை, உயிர் என அனைத்தையும் மண்ணுக்காக இழந்த,
போராளிகளின் பெயரைச் சொல்லத்தானும் இத்தலைவர்களுக்குத் தகுதியிருக்கிறதா?
வெட்கம் கெட்டவர்கள்!
போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் போராளிகளின் பக்கம்தானும் திரும்பாதவர்களும்,
அவர்களின் அழிவுக்கு வழிதேடித் திரிந்தவர்களும்,
இன்று 'அண்ணன்' என்றும் 'தம்பி' என்றும் உரிமை கொண்டாடும் அசிங்கத்தை,
சகிக்கமுடியவில்லை!
தம் வாழ்வுக்கு வழிதேடி இச்சகம் பேசும் இவர்தம் இழிவுரைகளுக்கு,
கைதட்டல்கள் வேறு.
**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

அப்படி, துரோகத்தனமாய் சுமந்திரன் என்னதான் செய்துவிட்டார்?
போர் முடிந்த நாள் தொட்டு, நம் இனம் சார்பாக,
உலகத் தலைவர்களோடு தொடர்ந்து பேசிவருவது குற்றமா?
தமிழினத்தின் தனி அடையாளமாக நின்று,
பேரினத்தலைவர்களோடு சமதைப்பட்டு பேசி வருவது குற்றமா?
தனது சட்டத்திறமையால் ஆட்சியாளர்களை அவ்வப்போது அசைத்து வருவது குற்றமா?
எதைக் குற்றம் என்கிறார்கள் இந்தப் புல்லுருவிகள்.
சுமந்திரனின் இனநன்மை நோக்கிய முன்னெடுப்புக்களில் சில சறுக்கல்கள் நிகழ்ந்தது உண்மையே.
எவரிடத்தில்தான் சறுக்கல்கள் நிகழாது?
சறுக்கல்களே இல்லாதிருக்கவேண்டுமானால்,
நடக்காமல் இருப்பது ஒன்றேதான் வழியாம்.
அங்ஙனம் இனத்திற்காக எதுவுமே செய்யாதவர்கள்தான்,
சுமந்திரனின் சில சறுக்கல்களை பூதக்கண்ணாடியால் தாமும் பார்த்து,
மக்களுக்கும் காட்டி வித்தை செய்து கொண்டிருக்கிறார்கள்.
இவர்கள் தான் நாளைய தலைவர்களாம்.
**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

போர் முடிந்த காலத்திலிருந்து எம் இனம் நோக்கி நீட்டப்பட்ட,
உலக நாடுகளின் துணைக்கரங்களைபற்றி,
இயங்கிக் கொண்டிருக்கும் ஒரே மனிதனாய்,



இன்றுவரை செயற்பட்டு வருகிறார் சுமந்திரன்.
அவர்களோடு சமதைப்பட்டு உட்கார்ந்து பேசும் சட்ட அறிவு,
சமயோசிதம், விட்டுக் கொடுத்தல், தந்திரம் என,
அனைத்துத் தகுதிகளும் அவரிடம் நிறைந்துகிடக்கின்றன.
உலக நாடுகள் என்றில்லை, நம் நாட்டின் பேரினவாதத் தலைவர்கள் கூட,
தமிழர் நலம் பற்றிப் பேசுவதானால் சுமந்திரனோடுதான் பேசி வருகிறார்கள்.
இதுதான் யதார்த்தநிலை.- உண்மையைச் சொல்லப்போனால்,
நமது மற்றைய தலைவர்களெல்லாம் வெறும் போடுதடிகள் போலத்தான்.

***

*'உலகநாடுகளிடமும் பேரினத்தலைவர்களிடமும்,*
*சுமந்திரனுக்குச் சமமான செல்வாக்கு எமக்குமுண்டு.'*
*'சுமந்திரனுக்கு இருக்கக்கூடிய சட்டஅறிவு, ஆளுமை எமக்குமுண்டு'* என்று,
துணிந்து பேச இன்றைய தமிழ்த்தலைவர்கள் எவர்க்கேனும் தகுதி உண்டா?
சிலர் வீம்புக்காக *'உண்டு'* என்பார்கள். அது உண்மையானால்,
ஏன் இதுவரை மேற்சொன்னவர்களில் ஒருவரும் உங்களைத் திரும்பியும் பார்க்கவில்லை?
*'சரக்கிருந்தால் மிடுக்கு இருக்கும்'* என்பது பழமொழி.
சுமந்திரனை ஒழிக்க நினைக்கும் தலைவர்களிடம் சரக்குமில்லை, மிடுக்குமில்லை.
ஆசையும் சுயநலமும் மட்டும்தான் அளவுக்கு அதிகமாய் இருக்கிறது.
அதைத் தகுதியாய் வைத்து மக்களைத் திசைதிருப்ப முயல்கிறார்கள்.
*'யதார்த்தவாதி வெகுசன விரோதி'* என்பார்கள்.- எவ்வளவு பெரிய உண்மை.
சுமந்திரனின் யதார்த்தத்தை வெகுசன விரோதமாக்கும் இத்தலைவர்தனைக் காண,
**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

ஏற்கனவே அரசு சார்ந்த அணிகள், தனித்து இயங்கும் அணிகள் என,

(07ஆம் பக்கம் பார்க்க)

சிறுசிறு உடைவுகளால் மெல்லிய ஆட்டம் கண்டிருக்கும் நம் இனத்தில்,
தம் பதவி ஆசையால் இம்முறை அணிபிரிந்திருக்கும் தலைவர்கள்,
ஆளுக்காள் பூகம்பத்தையே உருவாக்கப் போகிறார்கள்.
புதையப்போவது தாம் என்று தெரியாமல் நம் இனத்தாரும் கைதட்டி நிற்கின்றனர்.
ஒருவர் சர்வதேசத்தின் உதவி பெறுவேன் என்கிறார்.
இன்னொருவர் உரிமைக்காக சர்வஜன வாக்கெடுப்பே தீர்வு என்கிறார்.
மற்றொருவர் சர்வதேச நீதிமன்றத்திற்குப் போவேன் என்கிறார்.
அத்தனையும் பச்சைப் பொய்கள்.
எல்லோரும் தம் நோக்கம் சொல்கிறார்களே தவிர,
நோக்கத்தை அடையும் வழி சொல்கிறார்கள் இல்லை.
ஆசைகாட்டி மக்களை ஏமாற்றிப் பதவிகளைப் பிடித்துவிட்டால்,
பின்னர் இருக்கவே இருக்கின்றன 'சாட்டுக்கள்.'
அடுத்த தீபாவளி, அடுத்த பொங்கல், அடுத்த வருடப்பிறப்பு என,
'பேக்காட்ட' வேண்டியதுதான். - பிறகு இன்னொருவர் வந்து முன்னவரைக் கண்டிப்பார்.
இனவிடுதலைக்காக, தான் செவ்வாய்க் கிரகத்திலிருந்து உதவிபெறுவேன் என்பார்.
ஆனால் எப்படிப் பெறுவேன் என்று சொல்லமாட்டார்.
அதற்கும் இந்த இனம் கைதட்டும்.

**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

# துலையப்போகிறது நம் இனம்!

எஞ்சியிருந்த ஒற்றுமையால் நாடாளுமன்றத்தில் அதிகூடிய இருக்கைகளைப் பெற்றும்,
கூட்டமைப்பால் அதிகம் ஒன்றும் சாதிக்க முடியவில்லைத்தான்!
அதை அவர்களின் இயலாமை என்று முற்றுமுழுதாய்ச் சொல்லிவிட முடியாது.
அது சூழ்நிலையால் வந்த இயலாமை.
எதிரிகளின் பலம் தெரியாமலும் உலக அரசியலின் போக்குத் தெரியாமலும்,
ஏதோ மேசையில் கிடந்த மாம்பழத்தை எடுத்துவரத் தவறிவிட்டார்கள் என்பது போல,
கூட்டமைப்பைக் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
கூவிக்கூவி மக்களை ஏமாற்றும் மற்றைய தலைவர்கள் பதவிக்கு வந்தால்தான்,
அவர்களால் என்ன சாதிக்க முடியப்போகிறது என்ற உண்மை தெரியவரும்.
கூட்டமைப்பில் பல குற்றங்கள் உண்டு,
ஆனால் அவர்கள் எதிராளிகள் தரத் தயாராயிருக்கும் இன நன்மைகளை,
வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கான இனத்துரோகிகள் அல்லர் என்பது திண்ணம்.

***

முன்னாள் முதலமைச்சர், *'அதைச் செய்வேன் இதைச் செய்வேன்'* என்று,
தனது திருநீறையும் தாடியையும் முன்னாள் பதவியையும் காட்டி மயக்கம் செய்கிறார்.
படித்த மனிதரான இவர் ஏதாவது உருப்படியாய்ச் செய்வார் எனும் நம்பிக்கையில்,
மாகாண முதலமைச்சர் பதவியைத் தூக்கி,
இனத்திற்காக எப்பணியும் செய்யாத இவரது கையில் கூட்டமைப்புக் கொடுத்தது.
அப்பதவியை வைத்து அவர் சாதித்தது எதனை?
துரோகம், வஞ்சனை, குழப்பம், நிர்வாகச் சீர்கேடு., தன்னலம் என்பவற்றைவிட,
வேறெவற்றையேனும் அவர் சாதித்தாரா? - வெட்கக்கேடு!
இவர்தான் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கப்போகிறாராம்.
*'கூரையேறி கோழி பிடிக்கத் தெரியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போன'* கதைதான்.
இவரை நம்பிக் கைதட்டவும் அவர் பின்னால் ஒரு கூட்டம் ஓடுகிறது.

**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

'இங்கு நடந்தது இன அழிப்புத்தான்' என மாகாணசபையினூடு,
ஐ.நா.சபைக்கு இவர்களால் அனுப்பப்பட்ட 'மகஜர்' என்னாயிற்று?
அதனால் இனநன்மை நோக்கி ஒரு துரும்புதானும் அசைந்ததா?
திடீரென ஒருநாள் ஜெயிலுக்கு விஜயம் செய்து,
போர்க்குற்றவாளிகளை மீட்கவெனத் தொடங்கிய முயற்சி பின்னர் என்னாயிற்று?
இப்படியே கேள்விகள் பலப்பல தேங்கி நிற்கின்றன.
சுன்னாக நிலத்தடி நீரில் எண்ணெய் கலந்ததை,
பொய்மை ஆராய்ச்சியாளர்களை அவுஸ்திரேலியாவிலிருந்து அழைத்து வந்து,
தனது மக்களின் உயிராபத்தைக் கூடப் பொருட்படுத்தாமல்,
பொய்யுரைத்த அசிங்கத்திற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?
தனது ஆதரவாள அமைச்சரின் ஊழலை மறைப்பதற்காக,
மற்றைய அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்து,
இன்று நீதிமன்றத்தால் 'குட்டுப்பட்டு' நிற்கும் அவலத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?
'உரிமைகோரி நிற்கும் நாங்கள், அரசாங்கத்திடம் எந்த சலுகைகளையும் எதிர் பாக்காமல்,
வாழப்பழக வேண்டும்' என்று மக்களுக்கு உரைத்துவிட்டு,
பதவி முடிந்த கடைசி நேரத்தில் தனக்கான வாகனத்தை அரசாங்கத்திடம் இரந்து நின்ற,
அசிங்கத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?
மக்கள் காதில் பூ வைக்கலாம். - இது மரத்தையே வைக்கும் முயற்சி.

***

பதவி தேடிப் பரிதவித்த சிலர், இவருக்கு முட்டுக்கொடுக்கவென முண்டியடித்து நிற்கிறார்கள்.
இந்தக் கூட்டத்தில் ஒரு படித்த அதிபர் வேறு.
கடைசி நிமிடம் வரை கூட்டமைப்பிடம் பதவி எதிர்பார்த்து நின்ற இவர்,
அது எட்டாப்பழமாய் ஆனதும், இன்றைக்கு வேறொரு பக்கமாய் வலைவீசி,
'மீன்' பிடிக்க முயற்சிக்கிறார்.

**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

இங்ஙனமாய் எதிராளிகளின் கூத்து ஒருபக்கம் நடக்கிறது என்றால்,
கூட்டமைப்புக்குள்ளேயே சுமந்திரனுக்கு எதிராக செயற்பட,
ஒரு தனித்த கூட்டணி இயங்குவது மற்றொரு வேடிக்கை.
தன் பத்திரிகையை வைத்துப் பேரம் பேசி பதவி பெற்றதாய்ச் சொல்லப்படும்,
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்,
'இவருக்கு இம்முறை 'சீற்' வழங்கக் கூடாது' என,
சுமந்திரன் வெளிப்படையாகச் சொன்ன பகையை மனதில் வைத்து,
ஒரே கட்சியில் இருந்து கொண்டே தனது பத்திரிகையினூடு,
சுமந்திரனுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறார்.
அதுபோலவே பணம், குடும்பம் போன்ற உள்நோக்கங்களால் வேறுசிலரும்.
சுமந்திரனின் எதிராளிகள் வரிசையில் இணைந்து நிற்கின்றனர்.

***

ஏற்கனவே முட்டிமோதி தான் பெற்றுக் கொண்ட பதவியை கையில் வைத்துக் கொண்டே,
மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு 'சீற் பெற்றுக்கொண்டிருக்கிறார் மேயர் ஆர்னோல்ட்.
கூட்டமைப்புக்குள் வேறு தகுதியானவர்கள் இல்லவே இல்லையா?
எப்படி, எவர் சிபாரிசில் இவருக்கு இந்த 'சீற்' கிடைத்தது?
எனும் வினாவுக்கான பதில் மர்மமாகவே இருக்கிறது.
சுமந்திரனால் அடையாளங்காட்டப்பட்ட இவரும்,
இன்று சுமந்திரனுக்கு எதிரான அணியில்.

***

தனக்கு 'சீற்' கிடைக்கவில்லை என்றதும் மாதர் அணித்தலைவி ஒருத்தி,
கட்சியின்மேல் ஊழல் குற்றச்சாட்டு சாட்டுகிறார்.
அது உண்மையானால், அவ் உண்மையை அவர் ஏன் இதுவரை உரைக்க வில்லை?
'சீற்' கிடைத்திருந்தால் அவர்சொல்லும் ஊழலை அவரே அங்கீகரித்திருப்பார் போல,
காணாமல்போனோர் சார்ந்த இன்னொரு அமைப்பு,
ஏதோ சுமந்திரன்தான் அவர்களை ஒளித்து வைத்திருக்குமாப்போல்,
அவரைத் தனித்துக் குற்றம்சாட்டி நிற்கிறது.

***

இவர்களைத் தவிர வெளிநாடுகளில் வசதியான வாழ்வைத் தேடிக்கொண்டு,
பொழுதுபோக்கிற்கான தமது தேசப்பற்றை சுமந்திரன் எதிர்ப்பு மூலம்,
காட்டிக்கொண்டிருக்கிறார்கள் வேறுசிலர்.
உள்ள பிரிவுகள் காணாது என்று,
திடீரெனக் காவி உடை அணிந்த ஒரு மனிதர்,
சமயப்பகை வளர்த்து சுமந்திரனை அதற்குள் இழுத்து விடப்பார்க்கிறார்.
திருக்கேதீச்சரத்தில் நடந்த சைவ, கிறிஸ்தவ முரண்பாட்டில்,
சைவர்கள் பக்கமாய் நின்று, திருக்கேதீச்சரத்தின் சார்பாக வழக்காடும் வக்கீலாக,
சுமந்திரன் செயற்படுவதை இவர் மறந்துபோனது ஏனோ?
அத்தனை பேரும் பொய்யர்கள்.

**அருவருப்பாக இருக்கிறது.**
**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

இவர்கள் எல்லாம் இனத் துரோகிகள் இல்லையாம்.
சுமந்திரனும் சம்பந்தனும் தான் இனத் துரோகிகளாம்.
இங்ஙனமாய் விரல் நீட்டி நிற்போர்க்கு,
அடுத்த தேர்தலில், 'வீட்டிற்குள்' 'சீற்' கிடைத்தால்,
கூவிக் கொண்டு ஓடி வருவார்கள் என்பது மட்டும் நிச்சயம்.

***

ஒன்றை உறுதிபட எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.
எனக்கும் சுமந்திரனுக்கும் எந்தத் தனிக்கடமைப்பாடுகளும் இல்லை
சுமந்திரனால் நான் எவ்விதப் பயனையும் பெறப்போவதுமில்லை.
சுமந்திரனில் தவறுகள் இல்லை என்பதும் என் கருத்தில்லை.
சுமந்திரனின் தவறுகளை நான் முன்னர் பலதரம் வரிசைப்படுத்தியும் இருக்கிறேன்.
இந்தக் கட்டுரைக்காக என்னைப் பலபேர் திட்டப் போகிறார்கள்.
எனக்கான எதிர்ப்பு வலுப்பெறப்போகிறது.
அவற்றையெல்லாம் தெரிந்து கொண்டே இதனை எழுதுகிறேன்.

***

அறுபது வயதைக் கடந்துவிட்டேன் இனியும் என்னுடைய பெருமை நோக்கி,
பொதுமை பாராட்டி வாழ நான் விரும்பவில்லை.
இனத்திற்குத் தீமை என்று தெரிகிறபொழுது,
அதை மக்களுக்குச் சொல்லாமல் விடுவது தவறென்று என் மனச்சாட்சி சொல்கிறது.
தீமையைக் கண்டு கண்டிக்காமல் இருந்ததாலேயே,
பீஷ்மரும், துரோணரும் போரில் வீழ்ந்தார்கள்.
பாவத்தைப் பார்த்திருந்த பாவமே அவர்களை வீழ்த்தியது.
அந்தப் பாவத்தைச் செய்ய நான் தயாராகவில்லை.
தனிப்பட்ட ரீதியில் நானோ என்னைச் சார்ந்த அமைப்போ,
இக்கட்டுரையால் சிலவேளை சிலரது பகைக்கு ஆளாகலாம்.
பொதுவெளிகளில் என்னை யாரும் கண்டபடி திட்டலாம்.
'உங்களுக்கு எதற்கு அரசியல்' என்று வேறு சிலர் உபதேசிக்கலாம்.
அதுபற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை.

***

நிறைவாக ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன்.
இன விடுதலைப்போர் நடந்த காலத்தில்,
பிரபாகரனுடைய இருப்பு எவ்வளவு முக்கியமாய் இருந்ததோ,
இன்றைய அரசியல் சூழ்நிலையில் சுமந்திரனது இருப்பும், இனஒற்றுமையும்,
அந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றன.
இந்த உண்மையை நிராகரிப்பவர்களே இனத் துரோகிகளாம்.

**மாற்றம் வராவிட்டால் - துலையப்போகிறது நம் இனம்.**

***

முற்றும்

# தமிழ்நாட்டிலும் மின் கட்டண பிரச்சினை!



கொரோனா ஊரடங்கின் பின்னர் அறவிடப்பட்ட மின் கட்டணத்தில் பெருமளவு அதிகரிப்புக் காணப்படுகின்றது என்று இந்தியாவின் தமிழக மாநிலத்தில் முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

இது தொடர்பாக வழக்கு ஒன்றும் தொடரப்பட்டுள்ளது. மார்ச் – ஏப்ரல் மாதங்களில் ஊரடங்கின் காரணமாக, ஒவ்வொரு இல்லமாகச் சென்று மின்சாரப் பயன்பாடு குறித்த கணக்கெடுப்பைத் தமிழ்நாடு மின் வாரியம் மேற்கொள்ளவில்லை.

அதனால், மார்ச் – ஏப்ரல் மாதங்களுக்கு முந்தைய மாதக் கட்டணத்தையே செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு அடுத்த முறை மின்சாரப் பயன்பாடு கணெக்கெடுக்கப்படும்போது இரு சுற்றுகளுக்கும், அதாவது நான்கு மாதங்களுக்கு சேர்த்து எடுக்கப்படும் என்றும் நான்கு மாதங்களுக்கான கட்டணத்தில், முன்பு செலுத்திய தொகை கழித்துக்கொள்ளப்பட்டு, மீதித் தொகை அறவிடப்படும் எனவும் மின் வாரியம் தெரிவித்திருந்தது.

ஆனால், இந்த முறையில் கட்டணம் கணக்கிடப்பட்டபோது, பலருக்கும் பெரும் தொகை மின் கட்டணமாகக் கணக்கிடப்பட்டிருப்பதாக நுகர்வோர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக தேசிய மக்கள் கட்சியைச் சேர்ந்த எம்.எல். ரவி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கு ஒன்றையும் தொடர்ந்திருக்கிறார். இலங்கையில் இந்தப் பிரச்சினை இனம் காணப்பட்டுத் தீர்வுகள் குறித்து ஆலேசிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# எல்லையில் கண்காணிப்பு!

எல்லைப் பதற்றம் தணிந்த பிறகு லடாக்கின் முக்கிய பகுதிகளில் கண்காணிப்புப் பணியை மீண்டும் இந்தியா ஆரம்பிக்க இருக்கின்றது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பிங்கர்ஸ் மலைத் தொடர்களில் இந்தியா மீண்டும் தனது கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கண்காணிப்புப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன, ஆனால் பதற்றமான நிலைமை சீரடைந்து வருவதால் மீண்டும் இந்திய எல்லை நிலவரங்கள் நேரடியாகச் சென்று ஆய்வுசெய்யப்படவுள்ளனஎன்றுஅரச வட்டாரங்கள் கூறியதாக இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# பஸ்சிலிருந்து தூக்கி வீசப்பட்ட பெண் பரிதாபகரமாகச் சாவு!

## கொரோனாத் தொற்றாளர் என்ற பயத்தில் சம்பவம்



இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த இளம்பெண் அந்தப் பேருந்தில் இருந்து வெளியே தூக்கி வீசப்பட்டதில் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தியாவின் தலைநகர் டெல்லியில் இருந்து ஷிகோகாபாத் நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தில் இந்தப் பரிதாபச் சம்பவம் நடந்தது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

தனது தாயுடன் 19 வயதுடைய அன்ஷிகா யாதவ் என்கிற பெண் பயணம் செய்தார். கொரோனா வைரஸ் பாதிப்பின் அறிகுறிகள் அந்தப் பெண்ணிடம் இருந்ததாகச் சந்தேகமடைந்த சக பயணிகள், இதுபற்றி ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்குத் தெரி வித்துள்ளனர். இதையடுத்துப் பேருந்தை நிறுத்தி ஓட்டுநரும், நடத்து நரும் சேர்ந்து அந்தப் பெண்ணைப் பல வந்தமாக வெளியே தூக்கி வீசியுள்ளனர். இதனால் படுகாயமடைந்த அந்தப் பெண் அடுத்த 30 நிமிடங்களில் வீதியிலே உயிரிழந்துள்ளார்.

இதுகுறித்து உயிரிழந்த பெண்ணின் சகோதரர், கூறுகையில், எனது சகோதரி மீது போர்வை ஒன்றைப் போர்த்தியுள்ளனர். அந்தப் போர்வையைக் கொண்டு அவரை இருக்கையில் இருந்து இழுத்துச் சென்று வெளியே தள்ளி இருக்கின்றனர். அப்போது எனது தாயார் அவர்களிடம் கெஞ்சியுள்ளார்.

ஆனால் ஓட்டுநரும், நடத்துநரும் கேட்கவில்லை. உத விக்கு யாரும் வரவில்லை. எனது சகோதரிக்கு எந்தவித உடல்நலப் பாதிப்போ அல்லது நோய்களோ இல்லை. முன்னதாகச் சிறுநீரகத்தில் கல் இருந்தது. பின்னர் அது சரியாகி விட்டது என்றார்.

இதுபற்றி உத்தரப் பிரதேச மாநில பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது இயற்கையான மரணம் என்று கூறிப் பொலிஸார் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய மறுத்துவிட்டனர். அந்தப் பெண்ணின் பிரேத பரிசோதனையில் இறப்பிற்கான காரணம் மாரடைப்பு என்று தெரியவந்துள்ளது என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனல் மின் நிலையத்துக்கு 5 கோடி ரூபா அபராதம்!



நெய்வேலி அனல்மின் நிலையத்தில் அண்மையில் ஏற்பட்ட விபத்துக்காக, அந்த அனல் மின் நிலையமான என்.எல்.சி. நிர்வாகத்துக்கு 5 கோடி ரூபா (இந்திய மதிப்பில்) குற்றப் பணம் விதித்தது தேசிய பசுமைத் தீர்ப்பாயம். நெய்வேலி என்.எல்.சி. இரண்டாவது அனல்மின் நிலையத்தில் உள்ள 5ஆவது பகுதியில் உள்ள கொதிகலனில் ஏற்பட்ட தீ விபத்தால் சம்பவ இடத்திலேயே 6 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 7 பேர் சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து மருத்துவமனையில் உயிரிழந்தனர்.

தற்போது 9 பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர். இதனிடையே குறித்த அனல்மின் நிலையத்தின் தலைமை அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டார். மேலும், இந்தத் தீ விபத்துக் குறித்து உயர் மட்ட விசாரணை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், உள்கட்ட அமைப்புக்கள் குறித்து விசாரணை செய்வதற்கும் குழு அமைக்கப்பட்டது.

இந்த நிலையில், அனல் மின் நிலைய நிர்வாகத்துக்குத் தேசிய பசுமைத் தீர்ப்பாயம் 5 கோடி ரூபாவை இடைக்காலக் குற்றப்பணமாக விதித்துள்ளது. இந்தப் பணத்தை கடலூர் மாவட்ட நீதிமன்றத்தில் இரண்டு வாரங்களுக்குள் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.



# திருப்பதியில் கொரோனா அதிகரிப்பு

## தனிமைப்படுத்தப்படுவதாக அறிவிப்பு

இந்தியாவின் திருப்பதி ஆலயத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகிறது. திருமலையிலுள்ள 50 மாநகராட்சிப் பிரிவுகளில் 43 பிரிவுகளில் தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது. திருப்பதியில்மட்டும் 800க்கும் மேற்பட்டோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் மட்டுமே 500க்கும் மேற்பட்டோருக்கு பாதிப்பு ஏற்பட்டது. நேற்று 80க்கும் மேற்பட்ட தேவஸ்தான ஊழியர்களுக்கு கரோனா தொற்று கண்டறியப்பட்டது என்று சித்தூர் மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், திருமலை தனிமைப் படுத்தப்பட்ட பகுதி என சித்தூர் மாவட்ட மருத்துவ துறை நேற்று மதியம் அறிவிப்பு வெளியிட்டது. ஒரு மணி நேரத்தில் அந்த அறிவிப்பில்; இருந்த திருமலை பெயரை நீக்கியது. இதனால், தேவஸ்தான ஊழியர்கள் உட்பட பொதுமக்களும் குழப்பம் அடைந்துள்ளனர். இந்த விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

# செயலிகளைப் பயன்படுத்த இராணுவத்துக்குத் தடை!

முகநூல், கீச்சகம் உள்ளிட்ட செயலிகள் மூலம் விடுக்கும் தகவல்களால் ஏமாறக் கூடாது என்று இந்தியச் சிப்பாய்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், சீனாவுடன் தொடர்புடைய செயலிகள் சிலவற்றைப் பயன்படுத்தக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூம், விமேட் உள்ளிட்ட காணொலி நேரலைச் செயலிகள் மற்றும் பப்ஜி போன்ற ஆடுகளச் செயலிகள், மின்னணு வர்த்தகம், செய்தி, இசை உள்ளிட்ட செயலிகளைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது இந்திய இராணுவம்.

இன்ஸ்டாகிராம், டிக் டொக், ஜென்டர், ரேர்இட் உள்ளிட்ட செயலிகள் தடைக்குட்பட்டிருந்த நிலையில் தற்போது மேற்படிச் செயலிகளும் அந்தத் தடைக்குள் உள்ளடங்குகின்றன.





# ஆசியாவின் மிகப்பெரிய சூரிய மின் சக்திப் பூங்கா

ஆசியாவின் மிகப்பெரிய சூரிய மின் சக்தித் திட்டத்தை இந்தியப் பிரதமர் மோடி நேற்றுத் திறந்து வைத்தார். இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள ரேவா நகரில் 750 மெகா வாட்ஸ் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய மின் திட்டம் ஒன்றை இந்தியப் பிரதமர் மோடி நேற்றுக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

ஆசியாவின் மிகப்பெரிய சூரிய மின் திட்டமாக இது கருதப்படுகிறது. ஆயிரத்து 500 ஹெக்டேயர் பரப்பளவில் இந்தச் சோளார் மின் சக்திப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# அதிக உயிரிழப்பை ஏற்படுத்துகிறது அறியப்படாத புதிய வகை நிமோனியா

## சீனா எச்சரிக்கை



கொரோனாவை விட அதிக உயிரிழப்பை ஏற்படுத்துகின்ற புதிய வகை நிமோனியா நோய் ஒன்று மத்திய ஆசிய நாடான கஜகஸ்தானில் பரவுவதாகச் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நோயானது, உலகைத் தற்போது உலுக்கி வரும் கொரோனாவை விட அதிக உயிரிழப்பை ஏற்படுத்தி வருகிறது என்றும் கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் இந்த நோய்க்கு 600க்கும் மேற்பட்டோர் அங்கு உயிரிழந்துள்ளனர் எனவும் கஜகஸ்தானில் உள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கஜகஸ்தானில் வசிக்கும் தங்கள் நாட்டு மக்கள் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் என்றும் சீனா அறிவுறுத்தல் விடுத்துள்ளது. இந்த ஆண்டில் இதுவரை ஆயிரத்து 722 பேர் கண்டுபிடிக்கப்படாத இந்தப் புதிய நிமோனியா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர் என்றும் தங்கள் நாட்டுக்; குடிமக்களுக்கு இது குறித்துச் சீனா, வி சற் தளம் மூலமாக எச்சரிக்கைச் செய்தி கொடுத்துள்ளது.

அறியப்படாத இந்த நிமோனியா எந்த வகையான வைரசால் ஏற்படுகிறது என்பது குறித்து கஜகஸ்தான் சுகாதாரத்துறை அதிகாரிகள் உட்படப் பல்வேறு அமைப்புகள் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிமோனியாவை உருவாக்கும் வைரஸ் கொரோனா (கோவிட் 19) உடன் தொடர்புடையதா? என்பதற்கு எந்த சான்றுகளும் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

கஜகஸ்தானின் வடமேற்கு எல்லை சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தைப் பகிர்ந்து கொள்கிறது. எனவே, இந்த நிமோனியா சீனாவுக்கு பரவி விடாமல் தடுக்க சீன அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# அமெரிக்காவுடன் இனிப் பேச்சில்லை கிம்மின் சகோதரி திட்டவட்டப் பேச்சு!



அமெரிக்காவுடன் வடகொரியா பேச்சு நடத்த வேண்டிய தேவை இல்லை என்று வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன்னின் சகோதாரியான கிம் யோ ஜோங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ அணுசக்தி தொடர்பாக வடகொரியாவுடன் விரைவில் பேச்சுகளை நடத்த வாய்ப்பிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் இதற்குப் பதிலளிக்கும் விதமாக வடகொரிய அதிபர் கிம்மின் சகோதரியான கிம் யோ ஜிங் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது -

அமெரிக்காவுடன் மீண்டும் அமர்ந்து பேச்சு நடத்துவதற்குத் தேவை இல்லை. ஒருவேளை பேச்சு நடத்தப்பட்டால் அது ஒரு தரப்பின் பெருமைக்காக மட்டுமே இருக்கும். தற்போதைய சூழலில் அமெரிக்காவுடன் பேச்சு நடத்த வேண்டிய தேவை இல்லை என்றார்.

வடகொரிய அதிபர் கிம்மின் சகோதரி கிம் யோ ஜிங், கிம்முக்கு அடுத்து சக்தி வாய்ந்த நபராக அந்நாட்டில் அறியப்படுகிறார். அதிபர் கிம்மின் சொந்தத் தங்கையான கிம் யோ ஜோங் அந்த நாட்டின் அதிகாரம்படைத்த அமைப்பான வடகொரிய தொழிலாளர் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் முக்கியமான அரசியல் தலைவராகவும் உள்ளார். கிம் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்தே தன்னுடைய தங்கைக்கு அரசியலில் முக்கிய பொறுப்புகள் வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நேபாளத்தில் நிலச்சரிவு 10 பேர் பரிதாபச் சாவு



நேபாளத்தில் கடந்தநாள்களில் பெய்தமழைகாரணமாகமைக்டி, ஜஜர்கோட், சிந்துபல் சோக் ஆகிய மூன்று மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி 10பேர் உயிரிழந்தனர். 40க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. அவர்களைத் தேடும் பணியில் அந்நாட்டு மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். நேபாளத்தில் கடந்த இரண்டு நாள்களாகக் கடும் மழை பெய்து வருவதால் அந்த நாட்டில் ஓடும் முக்கிய நதிகளில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேலும், 3 நாள்களுக்குக் கடும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.



# குழந்தைகளை வன்கொடுமை செய்த முதியவர் மீது தொடரப்பட்டது வழக்கு

இந்தோனேசியாவில் 300 வரையான குழந்தைகளை வன்கொடுமை செய்தார் என்ற குற்றத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முதியவர் ஒருவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள விடுதி ஒன்றில் கடந்த மாதம் 65 வயது மதிக்கத்தக்க பிராங்கோயிஸ் கமிலி அபல்லோ என்ற நபரைப் பொலிஸார் கைது செய்தனர். அவருடைய அறையில் இருந்து இரண்டு சிறுமிகளை மீட்டனர். இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கைது செய்யப்பட்ட அந்த நபர் இந்தோனேசியாவில் 300 க்கும் மேற்பட்ட குழந்தைகளை வன்கொடுமை செய்ததார் என்றும், அவருடன் நெருக்கமாக இருக்க மறுத்தவர்களை அடித்துத் துன்புறுத்தினார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டது.

குறித்த முதியவரின் மடிக் கணினியில் இருந்து 10 முதல் 17 வயதுக்குட்பட்ட நூற்றுக்கணக்கான குழந்தைகளுடன் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவது குறித்த காணொலிகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் சுற்றுலா நுழைவிசைவில் இவர் பல முறை இந்தோனேசியாவுக்குள் நுழைந்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. இந்த வழக்கில் குறித்த நபர் மரணதண்டனை எதிர்கொள்ள நேரிடம் என்று இந்தோனேசியப் பொலிஸ் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# ஹைட்ரொக்சி குளோரோ குயின் உட்கொள்கிறார் பிரேசில் அதிபர்

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சனரோ அதற்குரிய சிகிச்சையாகக் ஹைட்ரொக்சி குளோரோ குயின் மாத்திரையை உட்கொள்கின்றார் என்றும் அது நல்ல பலன் அளிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொரோனா வைரசால் உலகமே அச்சத்தில் இருக்கும் போது மக்கள் சமூக விலகல், முகக் கவசம் அணியத் தேவையில்லை சுதந்திரமாக நடமாடுங்கள் என்று கூறி வந்த பிரேசில் அதிபர் ஜெயிர்போல் சனரோ தானும் முகக் கவசம் அணியாமல் பொது வெளியில் உலாவினார். முகக்கவசம் அணியாமல் திரிந்த காரணத்தால் அந்த நாட்டு நீதிபதி பிரேசில் அதிபருக்குக் குற்றப் பணம் அறவிட்டார்.

இந்த நிலையில் ஜெயிர் போல்சனரோவுக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது அவர் வீட்டிலே தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், அவர் முகநூலில் நேரலையில் உரையாற்றினார். அப்போது அவர் தனக்கு கடந்த வார இறுதியில் உடல்நிலை பாதிக்கப்பட்டதில் இருந்து தான் ஹைட்ரொக்சி குளோரோ குயின் மாத்திரை உட்கொண்டுவருகிறேன் என்றும் அதனால் தன்னுடைய உடல் நலன் தேறி வருவகின்றது என்றும் தெரிவித்தார்.

# யானைகளின் இறப்புக் குறித்து ஆய்வு!



போட்ஸ்வானாவில் அண்மையில் 350க்கு மேற்பட்ட யானைகள் இறந்தன. இந்த யானைகளின் இறப்பு பெரும் அதிர்ச்சியையும், பரிதாபத்தையும் ஏற்படுத்தியது.

இந்த நிலையில் இறந்த நூற்றுக்கணக்கான யானைகளின் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்கு அவற்றின் மாதிரிகளைச் சிம்பாவேக்கு அனுப்பியதாகப் போட்ஸ்வானாச் செய்திகள் தெரிவித்தன. அனுப்பப்பட்ட மாதிரிகளிலிருந்து சோதனை முடிவுகளைப் பெற்றதாக போட்ஸ்வானா வெள்ளிக்கிழமை தெரிவித்தது. அந்த முடிவுகளைப் பொது வெளியில் அறிவிப்பதற்கு முன்பு அடுத்த வாரம் தென்னாப்பிரிக்காவிலிருந்து வரவிருக்கின்ற இது குறித்த மேலதிக முடிவுகளுக்காகக் காத்திருப்பதாகப் போட்ஸ்வானாச் செய்திகள் தெரிவிக்கின்றன இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட யானைகளின் சாவுக்குக் காரணம் என்ன என்பதை வனவிலங்கு அதிகாரிகள் தீர்மானிக்க முயற்சிக்கின்றனர்.

அத்தோடு வேட்டையாடுதல், தொற்று நோய் ஆகிய காரணங்களால் இந்த யானைகள் இறந்திருக்கலாம் என்பதை வன விலங்கு அதிகாரிகள் நிராகரித்தனர். அடுத்த வாரத்தில் இரண்டாவது தொகுப்பு முடிவுகள்வரும்என்றும்அதன்மூலமேயானைகளின் இறப்புகளுக்கானகாரணத்தைச்சரியாகக்கண்டறிந்து பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த முடியும் என்றும் போட்ஸ்வானா அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# உடைகின்றது தமிழ்த்தேசிய வாக்கு வங்கி!

## ஈ.பி.டி.பி. தவராசா விவரிப்பு



தமிழ் தேசியத்திற்கான வாக்குவங்கி உடைவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றது. சைக்கிள் சின்னத்துக்கும், மீன் சீன்னத்துக்கும் வாக்குகள் பிரிந்து செல்லப் போகின்றன.

நெற்றியில் பட்டையை போட்டு, பொட்டை வைத்துக் கொண்டு முன்னாள் வடக்கு முதலமைச்சர் மீனுக்கு வாக்களிக்குமாறு சொல்கின்றாரே என்பது கவலையளிக்கிறது என வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி. பிரமுகருமான தவராசா தெரிவித்தார்.

யாழ் ஊடக மன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மழைக்காலத்தில் ஈசல்கள் வருவதைப் போல தேர்தல் காலங்களில் புதிய வேட்பாளர்கள் வந்துள்ளனர். அவர்கள் தமது பொய் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். யுத்தம் முடிவடைந்த காலத்தில் இருந்து இன்று வரை கூட்டமைப்பு மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியது. குறிப்பிட்ட காலத்துக்குகள் அரசியல் தீர்வு என்றார்கள். பின்னர் தீர்வு கிடைக்காது விட்டால் போராட்டம் வெடிக்கும் என்றார்கள். 2011 இல் இருந்து சர்வதேசத்துக்கு எங்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல எங்களுக்கு வாக்களியுங்கள் என்றார்கள். இதுவரை எமது பிரச்சினைகளை சர்வதேசத்துக்குச் சொன்னார்களா என்று கூடத் தெரியவில்லை.

கடந்த மாகாணசபைத் தேர்தலில் இராணுவத்தை வடக்கில் இருந்து முற்றாக வெளியேற்றுவதற்கு வாக்களியுங்கள் என்றார்கள். அமெரிக்க ஜனாதிபதியோடும், பிரித்தானிய பிரதமரோடும் கதைக்க கூடிய வல்லமை உடையவரை வடக்கு முதலமைச்சர் ஆக்குங்கள் என்றார்கள். இறுதியில் அந்த வடக்கு முதல்வர் எதையும் மேற்கொள்ளது அனைவரது நேரத்தையும் வீணடித்தார். மேலும் கடந்த காலங்களில் சர்வதேசத்திடம் இருந்து தீர்வை பெற்று தருவதாகத் கூறினார்கள். பின்னர் நல்லாட்சியில் தீர்வு உறுதி என்றார்கள். இபோது சுயநிர்ணயம் எனத் தேர்தல் கால உணர்ச்சிக் கோஷங்களை எழுப்புகின்றார்கள்.

இவர்கள் ஒருபுறம், இருக்க இன்னொரு தரப்பினர் 'இருதேசம்; ஒரு நாடு' என்று கூறிக் கொண்டு திரிகின்றனர். இரு தேசம் என்ற கோட்பாட்டினை ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த அருளர் என்பவரே முதலில் முன்வைத்தார். தற்போது அந்த கோட்பாட்டினை முன்னணியினர் கையில் எடுத்துள்ளனர். அவர்களிடத்தில் பல சட்டத்தரணிகள் வேட்பாளர்களாக போட்டியிடுகின்றனர்.

சட்டதரணிகள் தங்களின் தொழில் நிமித்தம் அரசமைப்பின் 6 ஆம் சரத்தின் படி இலங்கையின் அரசமைப்பைப் பாதுகாப்பேன் என உறுதிமொழி அளிக்க வேண்டும். ஒற்றையாட்சி அரசமைப்பைப் பாதுகாப்பேன் என சத்தியபிரமாணம் செய்துவிட்டு மக்களிடம் இரு தேசம் என்கிறார்கள்.

இதற்கு அடுத்ததாக முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்கினேஸ்வரன் தலைமையிலான அணியினர் இம்முறை நாடாளுமனறத்தில் போட்டியிடுகின்றார்கள். கடந்த காலங்களில் மாகாண சபைகளின் செயற்படுகளை முடக்கி, கிடைத்த அதிகாரங்களை முழுமையாக செயற்பட விடாமல் தடுத்தனர். வடக்கு மாகாண கல்வி வீழ்ச்சியடைந்ததற்கு இவர்களே காரணம்.

இலங்கையின் சரித்திரத்தில் முதல் தடவையாக பாரதப் பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணம் வந்தபோது அப்போதைய முதலமைச்சராக இருந்த விக்கினேஸ்வரன் பிரேமானந்த சுவாமியுடன் கைதாகிய சகாக்களை விடுவிக்குமாறு கடிதம் ஒன்றை வழங்கினார். வடக்கு மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறாமல் தேவையற்ற கோரிக்கைகளை விடுத்தார்.

மாகாணசபைக்கு கிடைத்த அதிகாரங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தாமல் வெறுமனே பிரேரணைகளை மட்டும் நிறைவேற்றி மாகாணசபையை செயலற்ற ஒன்றாக மாற்றியவர்கள்தான் இன்று நாடாளுமனறத்தில் சாதிக்க போகின்றனர் எனக் கூறுகின்றனர். தமிழ் மக்களின் உரிமைப் பிரகடனம் நிகழ்ந்த வாட்டுக்கோட்டையில் தமது கட்சியின் கொள்கை பிரகடனத்தை வெளியிடுகின்றனர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை வென்றெடுப்பதற்கு 20ற்கும் மேற்பட்ட இயக்கங்கள் சரி பிழைகளுக்கு அப்பால் போராடின. இவர்கள் எதுவிதமான போராட்டங்களிலும் ஈடுபடாது தம்பி பிரபா என்று அரசியல் செய்வதற்கு இவர்களுக்கு என்ன தகுதி உள்ளது? இந்நிலையில் தமிழ் மக்கள் உணர்ச்சி வசப்படாது யதார்த்த பூர்வமான நிலையில் சிந்தித்து தமது பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும்.

மேத்தானந்த தேரரின் கருத்து பல்வேறு சர்ச்சைகளை எழுப்பியுள்ளது. அது அவரது தனிப்பட்ட கருத்தே ஒழியே ஒட்டுமொத்த சிங்கள மக்களின் கருத்து அல்ல. இவற்றுக்கு அடிப்படைக் காரணம் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தாது புறக்கணித்தமை ஆகும். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம் என ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அதனை புறக்கணித்துவிட்டு இப்போது சிங்களவர்கள் எமது பிரதேசங்களை சொந்தம் கொண்டாடுகின்றனர் எனப் புலம்புவதில் எதுவித அர்த்தமும் இல்லை. – என்றார் (ம – 11)

# தேர்தல் தொடர்பில் இதுவரை 2,498 முறைப்பாடுகள் பதிவு!

## பாரிய வன்முறைகள் எதுவும் இல்லை

கொழும்பு, ஜூலை 11

நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் தொடர்பாக இதுவரையில் மொத்தமாக 2 ஆயிரத்து 498 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்திற்கு 664 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையத்துக்கு ஆயிரத்து 834 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இந்தநிலையில், கடந்த 08 ஆம் திகதி மாலை 4 மணி முதல் மறுநாள் 9ஆம் திகதி மாலை 4 மணி வரையான 24 மணித்தியாலங்களில் 132 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு 20 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு 112 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, பாரிய வன்முறைகள் தொடர்பில் இதுவரை எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லைஎனஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைதான இரு பொலிஸ் அதிகாரிகளின் 7 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டு தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ் போதைப் பொருள் பணியகத்தின் இரண்டு அதிகாரிகளுக்கு சொந்தமான ஏழு வாகனங்கள் பல்லெவெல பகுதியில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி பொலிஸ் அதிகாரிகளுக்கு சொந்தமான நான்கு லொறிகள், இரண்டு வான்கள் மற்றும் ஒரு சொகுசு கார் ஆகியவை நேற்று முன்தினம் மாலை கம்பஹா, பல்லெவெல பகுதியில் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வாகனங்கள் அனைத்தும் பல்லெவெல, பந்துரங்கொடை பகுதியில் உள்ள ஒரு தொழிற்சாலைக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தன.

கைப்பற்றப்பட்ட வாகனங்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# மன்னாரிலும் 3 குடும்பங்கள் நேற்று தனிமைப்படுத்தலில்!

*மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உப்புக்குளம் பகுதியை சேர்ந்த மூன்று குடும்பங்கள் நேற்றைய தினம் முதல் எதிர் வரும் 14 நாள்களுக்கு சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.*

*இந்த விடயத்தை மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ் உறுதிபடுத்தியுள்ளார்.*

*கடந்த சில நாள்களாக சிறைச்சாலையில் கொரோனா தொற்று ஏற்பட்டமை காரணமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சில கைதிகள் பாதுகாப்பு காரணங்களுக்காக வீடுகளுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.*

*அவ்வாறு அனுப்பப்பட்ட நபர் ஒருவர் மன்னார் உப்புகுளம் பகுதியில் அவரது வீட்டில் தங்கியிருந்த நிலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மாலை மீண்டும் பரிசோதனைக்காக அழைத்து செல்லப்பட்டுள்ளார்.*

*அதன் அடிப்படையில் அந்தவ் நபருடன் தொடர்பில் இருந்த உறவினர்கள் உட்பட மூன்று குடும்பத்தினர் நேற்றுத்தொடக்கம் 14 நாள்களுக்குத்தங்களுடைய வீடுகளிலேயே சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# ரஷ்யாவில் சிக்கியிருந்த மேலும் 266 பேர் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூலை 11

ரஷ்யாவில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 266 பேரை ஏற்றிய ஶ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விசேட விமானம் மஸ்கட் நகரிலிருந்து நேற்றுப் பகல் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. ரஷ்யாவில் உயர் கல்வியைத் தொடர்வதற்காகப் புறப்பட்டுச் சென்றி ருந்த மாணவர்களே இவ்வாறு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் விமான நிலையத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

# பொலன்னறுவையில் வரலாற்று வெற்றி தாம் ஈட்டுவார் என மைத்திரி தம்பட்டம்

வரலாற்றில்பதியக்கூடியசாதனையை நிலைநாட்டி பொலன்னறுவை மாவட்டத்தில் தாம் வெற்றி பெறப் போகிறார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை திம்புலாகலை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

என்னை விமர்சிக்கும் நபர் பொலன்னறுவைக்குக் கூடுதல் சேவைகளைச் செய்யவில்லை, மைத்திரிபால சிறிசேனவே செய்தார் என்ற விடயம் மக்களின் மனங்களில் உள்ளது.

ஓய்வு நாற்காலியில் அமர்ந்து மைத்திரிபால சிறிசேன பொலன்னறுவை மாவட்டத்திற்கு என்ன செய்தார் என்பதை சிந்தித்து பார்க்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

பொலன்னறுவையில் அரசியல் விளையாட்டை எப்படி விளையாட வேண்டும் என்று அறிந்தவர் என்னை விட எவரும் இருக்க மாட்டார்கள். நான் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி இருந்தாலும் என்னுடன் போட்டியிட அவர்களுக்கு எந்தத் தகுதியும் இல்லை. பொலன்னறுவை மக்களுக்கு என்ன செய்தீர்கள் என்று கேட்டால் அவர்களுக்குப் பதிலளிக்க எதுவுமில்லை.

பிரதமர் டி.எஸ். சேனாநாயக்க மஹாவெவ குளத்தை புனரமைத்து வறட்சியை போக்கிய பின்னர், பொலன்னறுவை மக்களின் வயல்களுக்கு பாசன நீர், வீதிகள், வைத்தியசாலை, கல்வி அலுவலகம், தொழில் வாய்ப்பு மற்றும் காணிகளை வழங்கியது என்னை விமர்சிக்கும் நபர் அல்ல, இந்த மைத்திரிபால சிறிசேன என்பது பொலன்னறுவை மக்களின் மனங்களில் இருக்கின்றது எனவும்மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம், மன்னாரில் 28 பேர் தனிமைப்படுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், ஜூலை 11

கந்தகாடு புனர்வாழ்வு முகாமுக்குச் சென்று வந்த யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 28 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.


கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்துக்கு கடந்த 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இரண்டு குடும்பங்களும் கோப்பாய், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு குடும்பமும் என 4 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கோப்பாயில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மன்னார் – உப்புக்குளம் பகுதியை சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். சிறைக்கைதிகளுடன் பழகிய நபர் என்பதால், விடுதலை செய்யப்பட்டவர் நேற்று மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக வடக்கு மாகாண சுகாதா சேவைகள் பணிப்பாளர் கூறியுள்ளார். (மேலும் செய்திகள் 4, 5,10 ஆம் பக்கங்களில்)

# சுகாதார நடைமுறைகளுக்கமைய இம்முறை நல்லூர் ஆலய உற்சவம்



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் சுகாதார நடைமுறைகளுக்கமைய எதிர்வரும் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகுமென யாழ். மாநகர சபையின் பதில் முதல்வர் து. ஈசன் தெரிவித்துள்ளார்.

இக்கட்டான சூழ்நிலையிலும் உற்சவம் இடம்பெறுமென்பதை ஆலய நிர்வாகத்தினர் உறுதிப்படுத்தியுள்ள நிலையில் தற்போதுள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதற்கு தயாரென ஆலய நிர்வாகத்தினர் எமக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனால் தற்போதுள்ள சுகாதார நடைமுறைகளுக்கமைய மஹோற்சவத்தினை நடாத்த எமது சுகாதார வைத்திய அதிகாரி சில விடயங்களை பரிந்துரை செய்துள்ளார்.

அவரால் பரிந்துரைக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளாக –

ஆலயத்திற்கு உள்ளே 50 பேர் மாத்திரம் செல்ல முடியும்.

மஹோற்சவ காலப் பகுதியில் தூக்குக் காவடி, காவடி, அங்கப் பிரதட்சணை, அன்னதானங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் போன்றவற்றிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆலயத்திற்குள் இடம்பெறும் உற்சவ நிகழ்வுகள் தொடர்பில் ஆலய நிர்வாகம் கவனம் செலுத்தும்.

எனினும் உற்சவகாலத்தில் ஆலயத்திற்கு வெளியே இடம்பெறும் செயற்பாடுகளுக்கு யாழ். மாநகர சபையும், பாதுகாப்புப் பிரிவினருமே பொறுப்பாளிகள்.

ஆகவே, சுகாதார நடைமுறைகளை மீறுவதற்கான அதிகாரம் எங்களிடமில்லை. தற்போதுள்ள சூழலில் சுகாதார நடைமுறைகளை நாங்கள் அனைவரும் பின்பற்றித் தான் ஆக வேண்டும்.

ஆலய உற்சவம் ஆரம்பமாவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் உள்ள நிலையில் குறித்த காலப் பகுதிக்குள் ஏதாவது தளர்வுகள் ஏற்படும் பட்சத்தில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சுப்...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

என்னைப்பொறுத்தவரை கடந்த அரசில் அமைச்சரவைப் பொறுப்புக்களை ஏற்றிருந்தால், இன்னும் கூடுதலான நிதிகளைப் பெற்றிருக்கலாம். அரசியல் தீர்வொன்று ஏற்படுவதில் உள்ள தாமதம், மக்களின் நாளாந்த வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை

ஏற்படுத்துகிறது. பொருளாதார ரீதியாக நாம் வலுப்பட வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் நலிவடைந்து விடுவோம்.

வளர்ச்சியை நாம் அடையாவிட்டால், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பில்லையென்றால் வெளிநாட்டுக்கு செல்வதையே இளைஞர்கள் ஒரேயொரு தெரிவாக வைத்துள்ளனர். அப்படி வெளிநாடு சென்றால் குடும்பங்கள், சமூகங்களின் வாழ்வாதாரம் ஓரளவு விருத்தியடையும். அதன் மூலம் எமது பொருளாதாரம் வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தின் மூலம், இப்பொழுது உள்ளதைப் போல ஓரளவு விருத்தியடையும். ஆனால் தீர்வென்பது இடம் பெறா மலே போய்விடும். எமது எண்ணிக்கையில் குறைவடைந்தால், தேசிய இனப்பிரச்சினை இருப்பதாகவே சொல்ல முடியாமல் போய்விடும்.

இந்த இரண்டுக்கும் இடையிலேயே நாம்இப்பொழுது சிக்கியுள்ளோம்.

இந்த அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான் மை தேவை. இதுவரை ஏற்படுத்தப்பட்ட எல்லாவித ஜனநாயகச் சீர்திருத்தங்களையும் மாற்றுவதாகத் தெரிவித்துள்ளனர். அப்படியான செயற்பாட்டுக்கு நாம் உடந்தையாக இருக்க முடியாது. சுயாதீன ஆணைக்குழுக்கள் கலைக்கப்பட்டு, முன்னர் இருந்ததை விட அதிகமான அதிகாரம் தனிநபரின் கைகளுக்குச் செல்லும். இது முழு நாட்டுக்கும் – குறிப்பாக தமிழ் மக்களுக்குக் கூடுதல் பாதகமாக இருக்கும்.

ஆகவே, அரசுக்கு ஆதரவு கொடுப்பதா – இல்லையா, சேர்வதா – இல்லையா என்ற தீர்மானங்கள் எடுக்கும்போது, அபிவிருத்தி என்கிற ஒரு விடயத்தை மையமாக வைத்து தீர்மானம் எடுக்க முடியாமல்உள்ளது. நாம் எல்லா விடயங்களையும் ஆராய்ந்துதான் முடிவெடுப்போம்.

இந்த அரசுக்கு தேவை மூன்றில் இரண்டுபெரும்பான்மை. ஆனால் அவர்கள் அதைப் பெறமாட்டார்கள் என்பது தான் அரசியல் நோக்கர்களின் கணிப்பு. இப்படியான நிலைமையில் எங்களது ஆதரவு அவர்களுக்குத் தேவைப்படலாம்.

அது தேவைப்பட்டால் எந்த அடிப்படையில், நிபந்தனையில் அரசுடன் இணையலாமென்பது பற்றி நான் ஏற்கனவெ சொல்லியுள்ளேன். அதைச் சொன்னதும் அரசதரப்பிலிருந்தும் நல்ல சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளனர். ஆனால் நான் அதைச் சொன்ன கணமே தவறாக அர்த்தப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றது.

அரசமைப்பு சீர்திருத்தத்துக்காகவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகின்றது. புதிய அரசமைப்பை உருவாக்கவதற்காக. புதிய அரசமைப்பு தேவையென முனைப்பாக வேண்டி நிற்பவர்கள் நாங்கள். அதனால், புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கான சந்தர்ப்பம் வரும்போது, அதை நிறைவேற்ற நாம் அரசுடன் பேச்சு நடத்தலாம். எமது அரசியல் அபிலாகைள் நிறைவேறும் பட்சத்தில் சிந்திப்போம் எனச் சொல்லியுள்ளேன்.

அது இப்பொழுது நடக்குமா, நடக்காதா என்பதை இப்பொழுது சொல்ல முடியாது. தேர்தல் முடிய வேண்டும் முதலில். ஆசன எண்ணிக்கையை தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்னரும் ஒரு பேரம் பேசும் படலம் இருக்கும். அதில் என்ன முடிவெடுக்கப்படும் எனத் தற்போதைக்குச் சொல்ல முடியாது.

வெறுமனே நாங்கள் அரசில் இணைகிறோம், அமைச்சர் பதவியை ஏற்கிறோம் எனத் தீர்மானங்களை எடுக்க முடியாது. ஆனால், இதையெல்லாம் சொல்வதால், நாங்கள் ஒரு போதும் அதைச் செய்ய மாட்டோம் எனச் சொல்லவில்லை. அதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகள் சேர்ந்து வரவேண்டும்.

சென்ற ஆட்சிக்காலத்தில் நாம் அமைச்சரவையில் இல்லாவிட்டாலும், அமைச்சரவையில் இருந்தவர்களைவிட அதிக அபிவிருத்திகளைச் செய்ய முடிந்தது. சஜித் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், வடக்கு – கிழக்கில் அதிகமான நிதியை வழங்கியதாலேயே தெற்கு அவரை நிராகரித்ததாக சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

அது உண்மை. வடக்குக்கு எவ்வளவு நிதி வந்ததென எமக்குத் தெரியும். ஆனால் தெற்கிற்குச் சென்ற நிதி பற்றி எமக்குத் தெரியாது. கடந்த அரசில் மிகப் பிரமாண்டமான அளவில் வடக்கு – கிழக்குக்கு அதிக நிதி வந்தது உண்மை.

அபிவிருத்திக்காக நாங்கள் செயற்பட வேண்டுமென்பதை முற்றுமுழுதாக நான் இணங்குகிறேன். அரசில் தீர்வொன்று எப்பொழுது வருமெனச் சொல்ல முடியாது. ஜனநாயகச் சூழலில் காத்திருந்த பேச்சு மூலம்தான் பெற முடியும். போர்ச்சூழல் என்றால் அடித்துப் பறிக்கலாம். இது அப்படியல்ல. பேசி இணங்கப்பண்ணி எடுக்கின்ற முறை. ஆகவே அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமெனச் சொல்ல முடியாது. அந்த இடைப்பட்ட காலத்தில் நாங்கள் எமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்வது அத்தியாவசிய தேவை.

அரசுடன் இணைவதா, இல்லையா என்ற தீர்மானம் பின்னர் எடுக்கப்படுவதாக இருந்தாலும், எற்கனவே சில தீர்மானங்களை எடுத்து நடைமுறைப் படுத்துகிறோம். வடக்கு – கிழக்கிற்கான மாற்றுப்பொருளாதாரநிறுவனமொன்றை ஏற்படுத்தம் முன்னெடுப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உதவியுடன் நமது பாரம்பரிய வாழ்வாதார தொழில்களை நவீனப்படுத்தும் ஒரு முறையையும், புதிதாக தொழில்நுட்பரீதியில் நவீன உலகில் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பது, உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களையும் வகுக்கவேண்டும்.

அரசின் உதவியை கூட எதிர்பார்க்காமல் நாங்களாகவே ஒரு பொருளாதாரத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். தேர்தலின் பின்னர் அது இயங்கத் தொடங்கும். அதன் முழுமையான பிரதிபலனை பெற ஓரிரு வருடங்கள் ஆகும்.

இவையெல்லாம் சாத்தியமாக தேர்தல் முடிவுகள் முக்கியமானவை. அமைச்சரவையில் சேர்வதாக இருந்தாலும் எந்த அமைச்சுக்கள், எத்தனை அமைச்சுக்கள், என்னவிதமான அதிகாரங்கள் என்பவற்றைப் பேரம் பேச எமக்கு பலம் இருக்க வேண்டும். அல்லது வெளியே இருந்தாலும் கூட, இத்தனை எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களின் வாக்களிப்பு அரசுக்கு தேவையாக இருக்கும்போது அந்த பேரம் பேசலைச் செய்யலாம்.

எப்படியான பாத்திரத்தை நாங்கள் வகிக்கப் போகிறோம் என்பது இப்பொழுது தெரியாவிட்டாலும், எங்களுக்கு தெரிந்த ஒன்று, நாங்கள் பலமான ஓர்அணியாக நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டும்– என்றார்.

# வன்னியிலும் தமிழர்களின் அடையாளத்தை அழிக்க முயற்சி என்று சாள்ஸ் எச்சரிக்கை!

*கிழக்கில் தமிழர்களின் அடையாளங்களை அழித்ததைப்போல் வன்னியிலும் தமிழர்களின் அடையாளத்தினை அழிக்க முற்படுகின்றனர் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற வேட்பாளர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.*



வவுனியா கற்குளத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் பேசிய அவர் –

1948 ஆம் ஆண்டு முதல் மகாவலி அதிகாரசபை, வனவள சபை, வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என நான்கு திணைக்களங்களும் நேரடியாக மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்துகொண்டு, தமிழர்களின் நிலங்களை அபகரித்து, அவற்றில் சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழர்களின் இன விகிதாசாரத்தினை இல்லாதொழிக்கும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.

வன்னியில் தமிழர்களின் இருப்பை கேள்விக்குட்படுத்தும் வகையில் தற்போதைய ஆட்சியாளர்களை கொண்ட அரசாங்கம் 2009 ஆம் ஆண்டின் பின்னர் அதிகமாக எங்களுடைய பிரதேசத்தில் மகாவலி மூலம் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டனர்.

அதனடிப்படையில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களை வைத்து தமிழ் வாக்குகளை பிரித்து ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்டு வருவதற்கு திட்டமிடுகின்றனர்.

இதனூடாக எவ்வாறு கிழக்கில் தமிழர்களின் அடையாளங்களை அழித்தார்களோ அதேபோல் வன்னியிலும் தமிழர்களின் அடையாளத்தினை அழிக்க முற்படுகின்றனர்.

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற தன் பின்னர் தமிழர்களுடைய காணிகளிலும் தமிழர்களுடைய அரச காணி விடயத்திலும் சிங்கள மக்களினுடைய செயற்பாடுகள் அதிகாரத் தொனியில் இருக்கின்றது.

இதற்காக இன்றைய ஆட்சியாளர்கள் செயலாளர்களாகவும் அதிகாரிகளாகவும் இராணுவ அதிகாரிகளை நியமித்திருக்கின்றார்கள்.

இராணுவ அதிகாரிகளை நியமித்ததன் ஊடாக இலங்கை ஜனநாயக நாடா அல்லது இராணுவ ஆட்சிக்குத் தயாராகின்றதா என்ற கேள்வி எங்கள் மத்தியில் இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் வன்னியில் தமிழர்களுடைய வாக்கு வீட்டுச் சின்னத்தைத் தவிர்த்து வேறு சின்னத்திற்கு செல்லக்கூடாது. அவ்வாறு வாக்களித்தால் நாங்களாகவே வன்னியில் ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரை உருவாக்குவதற்கு வழிவகுத்து விடுவோம். இது எமது மக்களுக்குள்ள அச்சுறுத்தலாகும் – என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி செயலணி உறுப்பினர்களின் தனிப்பட்ட கருத்தைப் பெரிதுபடுத்தாதீர்!

## கோட்டாபய வேண்டுகோள்



கிழக்கு தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்கும் செயலணிக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தெரிவிக்கும் தனிப்பட்ட கருத்துக்களைப் பெரிதுபடுத்தவேண்டாம். அது அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களே.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிழக்குச் செயலணி உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் சில தினங்களுக்கு முன்னர் வழங்கிய நேர்காணலில், திருக்கோணேஸ்வரம் ஆலயம் இல்லை, அங்கிருந்தது கோகர்ண்ண விகாரையே என்று குறிப்பிட்டிருந்தார். இது நாடு முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இதுதொடர்பில் அந்தச் செயலணியை நியமித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கும்போது –

செயலணி உறுப்பினர்களை நான் தான் நியமித்தேன். அதன் தலைவராகப் பாதுகாப்புச் செயலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலணி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை செயலணியின் கருத்தாக ஏற்கவேண்டாம். அது அவர்களின் தனிப்பட்ட கருத்து. அந்தக் கருத்துக்களை இன, மத, நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் பெருப்பிக்க வேண்டாம். இதேவேளை, கருத்துக்களை வெளியிடுபவர்களும் அவதானமாக இருக்கவேண்டும் – என்றார்.

## ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்



பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி நியோமல் ரங்கஜீவவை, ஒளிப்படம் எடுக்க முற்பட்ட ஊடகவியலாளரொருவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறை வழக்கில் பிரதிவாதியாக முன்னிலைப்படுத்தப்படவுள்ள பொலிஸ் போதைப்பொருள் பணியகத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி நியோமல் ரங்கஜீவவை உயர் நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து ஊடகவியலாளர் நேற்று ஒளிப்படம் எடுக்க முனைந்துள்ளார்.

இதனையடுத்து அவர் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நியோமல் ரங்கஜீவ வந்த போது, நான் சில படங்களை எடுத்தேன் இதனை அவதானித்த அதிகாரி, நீங்கள் யார் என்னைப் படம் எடுக்க என்று என்னை இழுத்துச் சென்றார். நான் எனது அடையாளத்தை நிரூபிக்க ஊடக வியலாளர் அடையாள அட்டையைக் காண்பித்தேன். எனது கமரா விலிருந்த இரண்டு மெமரி கார்ட்டுகளையும் பொலிஸார் பெற்றுக் கொண்டனர் – என்று பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

## சம்பிக்கவுக்கு குற்றப்பத்திரிகை!

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் முன்னாள் வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 3 பேருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ராஜகிரிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தின்போது முறையற்ற விதத்தில் செயற்பட்டமை மற்றும் நபர் ஒருவரைக் காயத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பாக அந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக கைது செய்யப்பட்ட சம்பிக்க பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## மின்சார சபை கடன் நிலுவையில் ஐயாயிரம் கோடி ரூபா அடைப்பு!

இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய 8,500 கோடி ரூபா நிலுவையில் ஐயாயிரம் கோடி ரூபா தொகையை எரிசக்தி அமைச்சு வழங்கியுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸின் விளைவாக உலகச் சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சியடைந்ததால், நிதி அமைச்சின் கருவூலத்தின் கீழ் ஒரு விசேட நிதியத்தில் இருந்து பெறப்பட்ட நிதியை கொண்டு கடன் செலுத்தப்பட்டதாக கூறினார். ஹம்பாந்தோட்டையில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றில் கருத்து தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் முடக்க நிலைக்கு மத்தியில் மின்சார கட்டண சலுகைகளை வழங்குவது குறித்து அரசாங்கம் பொருத்தமான முடிவை எட்டும் என்றும் கூறினார்.

# தாயின் ஒத்துழைப்புடன் 13 வயது சிறுமியை மயக்கிக் கெடுத்த தாயின் கள்ளக் காதலன்!

## அக்கரைப்பற்றில் நடந்த விபரீத சம்பவம்

அம்பாறை, அக்கரைப்பற்றில் தாயின் ஒத்துழைப்புடன் 13 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தாயையும் அவருடைய காதலனையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 3 வருடங்களாக தந்தை வெளிநாட்டில் வேலை செய்து வரும் நிலையில் குறித்த சிறுமியின் தாய் வர்த்தகர் ஒருவருடன் தொடர்பினைப் பேணி வந்துள்ளார். சுற்றுலா செல்வதாகக் கூறி மகளை அழைத்துச் சென்ற தாய், இரவு தங்கும் விடுதியொன்றில் மகளைத் தனியான அறையொன்றில் தங்க வைத்து விட்டு குறித்த காதலனுடன் தாய் தனியாக இருந்துள்ளார்.

அத்துடன், மகளுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து, குறித்த நபர் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தத் தாய் ஏற்பாடு செய்து கொடுத்தார் என ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மயக்கம் தெளிந்து சிறுமி விடயத்தை உணர்ந்த போதிலும் இந்த விடயத்தை வெளியில் சொன்னால் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிவரும் என தாயும், மறைமுகக் காதலனும் சிறுமியை அச்சுறுத்தியுள்ளனர்.

எனினும், வீடு சென்று சேர்ந்த சிறுமி வேதனை தாங்க முடியாமல் உறவினரிடம் இந்த விடயத்தைக் கூறியதையடுத்து பொலிஸாரால் சந்தேகநபர்கள் இருவரும் கைதாகியுள்ளனர்.

பாதிப்புக்குள்ளான சிறுமி அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் சந்தேகநபர்கள் இருவரும் அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2020 இல் வெளியிடப்பெற்றது.